பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 04 செவ்வாய்க்கிழமை (18-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:205

# பேச்சுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரா? விடுதலைப் புலிகள் அடியோடு மறுப்பு!

லண்டன்,ஜூன்18

**தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுவிட்டதாக வெளியான செய்திகளை விடுதலைப் புலிகள் அடியோடு மறுத்திருக்கின்றனர்.**

**நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து முடிப்பதற்கான காலம் இன்னும் கனியவில்லை.**

**புரிந்துணர்வு உடன்படிக்கை பூரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டாலேயே அது சாத்தியமாகும். இதில் புலிகள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள் - என்று புலிகளுடன் நெருக்கமான லண்டன்' வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.**

பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் பொறுப்பு அனுசரணை வழங்கும் நோர்வேக் குழுவினுடையது -

அந்தக் குழு தன்னிச்சையாக நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்காது.

இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுலைப் புலிகளையும் கேட்டு இருதரப்பினரதும் சம்மதத்துடனேயே நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும். அதாவது எந்தெந்த விஷயங்களை எப்படி எப்படியெல்லாம் நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பது என்பதை அரசும் புலிகளும் நோர்வே அனுசரணைக் குழுவிடம் தெரிவிக்கவேண்டும்.

அரசு தெரிவித்ததைப் புலிகளிடமும் புலிகள் தெரிவித்ததை அரசிடமும் அனுசரணைக் குழு காட்டும்.

இரண்டு தரப்புகளும் ஒருங்கே ஏற்றுக்கொள்ளும் விடயங்களைக் கொண்ட நிகழ்ச்சி நிரலை அனுசரணைக் குழு தயாரிக்கும். அந்த நிகழ்ச்சி நிரலில் இறுதி வடிவத்தை இருதரப்பும் அங்கீகரிக்கவேண்டும். அதுதான் மாநாட்டு நிகழ்ச்சி நிரலாக இருக்கும்.

இந்தவகையில் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு நோர்வே அனுசரணைக்குழு அரசிடமும் புலிகளிடமும் கேள்விக்கொத்துக்களைக் கொடுத்துள்ளது.

அவ்வளவுதான் இதுவரை நடந்திருக்கிறது என்று புலிகளோடு நெருங்கிய லண்டன் வட்டாரங்கள் தெரிவித்தன. கேள்விக்கொத்துக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

# தீவகத்தில் புலிகளுக்கு உற்சாகமான வரவேற்பு!



இது கட்டித் தழுவும் காட்சியல்ல. தீவுப் பகுதிக்குச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகளை அல்லைப்பிட்டியில் வைத்து படையினர் தீவிர உடற் பரிசோதனைக்கு உட்படுத்திய காட்சி. புலிகளின் மூத்த உறுப்பினர் வீமனை சிப்பாய் ஒருவர் உடற்பரிசோதனைக்கு உட்படுத்துவதைப் படத்தில் காணலாம்.

வீதியோரம் பகிரங்கமாக வைத்து உடற்பரிசோதனை செய்வதை புலிகள் ஆட்சேபித்தனர். பின்னர் அங்குள்ள மறைவிடம் ஒன்றில் வைத்து போராளிகளை படையினர் சோதனையிட்டனர். (மேலும் படங்கள் 2,3ஆம் பக்கங்களில்) *(படம்: தேவராஜன்)*

## கடற்படையினர் பார்த்திருக்க மக்கள் கட்டித்தழுவி ஆரவாரம்

ஊர்காவற்றுறை,ஜூன்18

**தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பணிக்குழுவினர் நேற்றுக் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவகப் பிரதேசத்துக்குள் கால் பதித்தனர். 37பேர் அடங்கிய போராளிகள் குழுவுக்கு அங்கு மக்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர்.**

ஐந்து மோட்டார் சைக்கிள்களில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் முன்னே வர, வேறு ஐந்து வாகனங்களில் ஏனைய போராளிகள் நேற்று முற்பகல் 11.10 மணியளவில் அல்லைப்பிட்டி சோதனை நிலையப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். அவர்களுடன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி ஆர்னியும் உடன் வந்தார்.

விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தீவகப் பொறுப்பாளர் செம்மணன், விடுதலைப் புலிகளின் நீதி,

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சென்ற இடமெல்லாம் விடாமல் தொடர்ந்த படையினர்!

ஊர்காவற்றுறை,ஜூன்18

நேற்று தீவகத்தில் புலிகள் சென்ற இடமெல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து கடற்படையினர் மற்றும் இராணுவத்தினரும் சென்றனர்.

தங்களது வாகன அணியைப் படையினர் பின் தொடர்வது பற்றி புலிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினரிடமும் முறையிட்டனர்.

அல்லைப்பிட்டியிலிருந்து சென்ற புலிகளின் வாகன அணியை பின்தொடர்ந்து ஒரு பஸ்ஸிலும் 3 பிக்கப் வாகனங்களிலும் கடற்படையினரும் பொலிஸாரும் சென்றனர்.

மாவீரர் இல்லத்துக்குச் சென்ற சமயம், படையினர் பின்தொடர்வதை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகளை இடுப்புப் பட்டியோடு அனுமதிக்க மறுப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்18

அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் விடுதலைப் புலிகளை சோதனைக்குட்படுத்திய படையினர், பெண போராளிகளை அவர்கள் அணிந்திருந்த இடுப்புப் பட்டியுடன் அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

பெண் போராளிகள் இடுப்பில் அணியும் 'பெல்ட்' ஓர் இராணுவ சாதனம் என்று படையினர் வாதிட்டனர்.

இதனால் இரு தரப்புகளுக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



..அப்ப சென்றார்கள் வென்றார்கள் என்று சொல்லுங்கோ..

## சீருடையுடன் தலைவரின் படம்; கடற்படை அதிகாரி ஆட்சேபம்!

யாழ்ப்பாணம்,ஜூன்18

நேற்று தீவுப்பகுதிக்குச் செனற போராளிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சீருடையுடன் தோன்றும் படங்கள் அச்சிட்ட கலண்டர்களை பொதுமக்களுக்கு விநியோகித்தனர்.

கடற்படை அதிகாரி ஒருவர் அந் நடவடிக்கையை ஆட்சேபித்தார்.

ஊர்காவற்றுறைச் சந்தியில் தங்களை வரவேற்ற மக்களுக்கு விடுதலைப் புலிகள், தலைவர் பிரபாகரனின் படம் அச்சிட்ட கலண்டர்களை விநியோகித்தனர்.


அந்தக் கலண்டரைப் பெற்றுக் கொண்ட கடற்படை அதிகாரி லெப்டினன்ட் கேணல் சந்திரசிறி தனது ஆட்சேபத்தை வெளியிட்டார்.

"இராணுவச் சீருடையுடன் கூடிய

(14ஆம் பக்கம் பார்க்க)




விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மலரஞ்சலி செலுத்துகிறார்.



அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் புலிகள் படையினருடன் உரையாடும் காட்சி.



காரைநகர் கட்டளை அதிகாரி ஜெயக்கொடியுடன் புலிகளின் தீவுப் பகுதி அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், பாப்பா, சேரலாதன் ஆகியோர் உரையாடும் காட்சி.



அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் ஊர்காவற்றுறை அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகத்துடன் புலிகள் பிரமுகர்கள் உரையாடுகின்றனர்.

# புலிகளின் முன்னிலையில் அரசு மண்டியிட்டுவிட்டது!

## தீவக விஜயம் குறித்து ஜே.வி.பி.

யாழ்ப்பாணம்,ஜூன்18

தீவுப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டித்துள்ளது.

இராணுவ முகாம்கள் ஊடாக விடுதலைப் புலிகள் தமது பயணத்தை மேற்கொள்ளவும் சயனைட் வில்லைகள் மற்றும் தொலைத் தொடர்பு கருவிகளுடன் தீவுப்பகுதிக்குச் செல்லவும் அரசாங்கம் அனுமதி வழங்கியதன் மூலம், புலிகள் முன்னிலையில் அரசு மண்டியிட்டுள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

எதிர்காலங்களில் தமது நடவடிக்கைகளை புலிகள் நினைத்தவாறு நடத்தி முடிப்பதற்கு அரசு வாய்ப்பளித்திருக்கிறது எனவும் -

இதற்கு எதிராகத் தம்முடன் இணைந்து நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் நடத்த அனைத்து மக்களும் முன்வரவேண்டும் எனவும்-

விமல் வீரவன்ஸ கேட்டுக்கொணடார். (ஐ-4-12)

# யாழ். மணிக்கூண்டுக் கோபுரம் நாளை வைபவரீதியாகத் திறப்பு

புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். மணிக்கூண்டுக் கோபுரத்தை வைபவ ரீதியாகத் திறந்துவைக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் லிண்டா டபீல்ட் அம்மையார், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தலா ஐந்தடி விட்டமுடைய நான்கு மணிக்கூடுகளும் கடந்த வாரம் கோபுரத்தில் பொருத்தப்பட்டன.

குறித்த நேரங்களுக்கு ஒலி எழுப்புவதற்கென ஒலிபெருக்கிகளும் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இதேவேளை -

நீண்டகாலமாக மக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த யாழ்.மணிக்கூட்டு வீதி நாளை முதல் பொதுமக்களின் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படவுள்ளது. (ஐ-4)

## அரசியல் பிரிவுடன் ச.ச.நிலைய உறுப்பினர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்18

வலிகாமம் மேற்கு பிரிவிலுள்ள சனசமூகங்களின் நிர்வாக உறுப்பினர்களுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த உள்ளனர்.

இப்பிரதேசப் பிரிவுக்குட்பட்ட சகல சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி.மேற்கு சனசமூக நிலையங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது. (ஒ-ரி)

# கல்வியியற் கல்லூரியில் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கல்லூரி மாணவர்கள், கண்காட்சியினை கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றனர்.

இந்தக் கண்காட்சி நேற்று 17 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நடைபெறுகிறது.

மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் இந்தக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்தக் கண்காட்சியை நாளாந்தம் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை -

மாணவர்களுக்கு பொழுதுபோக்கான நிகழ்ச்சியாக பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டமும், பாதாள கிணற்றில் பெண்களின் சைக்கிள் ஓட்டமும் இடம்பெற்றுவருகின்றன. (ஒ-180)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்18

வடகோப்பாய் இலுப்பையடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோக்ஷண நவகுண்டபக்ஷ அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி காலை 8மணி முதல் மாலை 4மணிவரை நடைபெறும். (13-15)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலைக்கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

25தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் அடுத்த மாதம் 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.(13-11-ரி)

★ ★ ★

துன்னாலை கிழக்கு வெலிக்கன் தோட்டப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (13-117)

★ ★ ★

சரவணை, கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக விழா எதிர்வரும 21ஆம் திகதி ·வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி 9மணி முதல் 5மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (13-ரி)

★ ★ ★

வடமராட்சி தம்பசிட்டி, ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்நிகழ்வின எண்ணெய்க் காப்பு சாததும் வைபவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (13-15)

★ ★ ★

பெரியவிளான் புனித யுவானியார ஆலய வருடாந்த திருவிழா நாளை 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி கர்லை திருப்பலிப் பூசையும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன. (13-135)

★ ★ ★

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் 25ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (13-ரி)

ஜப்பான் தென்கொரியா
உலகக் கிண்ண
கால்பந்து
2002 FIFA WORLD CUP KOREA JAPAN
31.05.2002 - 30.06.2002





பிரேஸில் நட்சத்திரம் ரொனால்டோவும் (வலது) பெல்ஜியம் வீரர் டானியல் வான் பைட்டினும் பந்துக்காக மோதுகின்றனர்.

# பிரேஸில், அமெரிக்கா அணிகளுக்கு வெற்றி!

சியோல்,ஜூன்18

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற இரு ஆட்டங்களில் அமெரிக்கா மற்றும் பிரேஸில் அணிகள் வெற்றி பெற்றன. இன்று நடைபெறும் இரு ஆட்டங்களுடன் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நிறைவுபெறுகின்றன. நாளை முதல் கால்இறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகும்.

முதலாவது ஆட்டம் அமெரிக்க அணிக்கும் மெக்ஸிக்கோ அணிக்கும் இடையே இடம்பெற்றது. 2-0 என்ற கோல் அடிப்படையில் அமெரிக்க அணி வென்றது. கால்இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. 1930ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகக் கிண்ணப் போட்டியில் அமெரிக்க அணி கால்இறுதிக்குத் தகுதி பெறுவது இதுவே முதற்றடவை.

ஆட்ட ஆரம்ப நிமிடங்களில் மெக்ஸிக்கோ வீரர்கள் மேலாண்மை செலுத்தினர். எனினும் பின்னர் அமெரிக்க அணி தமது முழுத் திறமையையும் காட்ட ஆரம்பித்தது. அணியின் முழுமையான அபார ஆட்டத்தால் ஆட்டம் ஆரம்பித்த 8ஆவது நிமிடத்திலேயே அமெரிக்கா முதலாவது கோலை அடித்தது. அந்த அணி வீரர் ஜோஸ் வூல்வ் தள்ளிக் கொடுத்த (Passing) பந்தை அவரது சகாவான பிரெய்ன் மக்பிரிட் கோல் கம்பங்களிலிருந்து சுமார் 10 யார் தூரத்தில் வைத்து மிக நேர்த்தியாக உதைத்தார். அற்புதமான கோல் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து ஆட்டத்தை சமநிலைப்படுத்த மெக்ஸிக்கோ வீரர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். ஆனால் அது நிறைவேறவில்லை. 1-0 என்ற நிலையில் முன்பாதி ஆட்டம்நிறைவடைந்தது.

பின்பாதி ஆட்டம் ஆரம்பித்த 7 ஆவது நிமிடத்தில் - ஆட்டத்தின் 52ஆவது நிமிடத்தில் ஆட்டத்தை சமப்படுத்த ஓர் அருமையான சந்தர்ப்பம் மெக்ஸிக்கோ அணிக்குக் கிடைத்தது. எனினும் அந்த அணி வீரர் லூனா அதனைத் தவறவிட்டார். 65ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீரர் லான்டன் டொனோ வான் தலையால் மோதி அமெரிக்காவின் இரண்டாவது கோலை அடித்து அதிர்ச்சியை ஏற்படுத்தினார். இதனால் அமெரிக்காவின் வெற்றிவாய்ப்புப் பிரகாசமானது.





இதற்கிடையில் அமெரிக்க துணை ஆட்டக்காரர் (Substitute) கோபி ஜோன்ஸ்டன் அபாயகரமான பலப்பரீட்சையில் இறங்கி முறைகேடாக ஆடியமைக்காக மெக்ஸிக்கோ வீரர் ரபீல் மார்க்கோஸ் நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப் பட்டார். இறுதியில் 2-0 என்ற கோல் அடிப்படையில் அமெரிக்கா வென்றது.

இரண்டாவது ஆட்டத்தில் பிரேஸில் அணியை எதிர்த்து பெல்ஜியம் அணி மோதியது. 2-0 என்ற அடிப்படையில் பிரேஸில் அணி இலகுவில் வெற்றி பெற்றது. ஆட்டத்தின் பெரும்பாலான நேரத்தை பிரேஸில் அணி தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் மார்க் வில்மோட்ஸ் தலையால் மோதி ஒரு கோலை அடிக்க முயன்றார். எனினும் அவரது துரதிர்ஷ்டம் பந்து பிரேஸில் வீரர் ஜூனியரால் தள்ளப்பட்டு வெளியே சென்றது. அவரது முயற்சியின் ஒரு நிமிடத்தில் பிரேஸில் வீரர் ரெனால்டோ உதைத்த பலமான உதையை பெல்ஜியம் கோல் காப்பாளர் டி விலிஹுர் அபாரமாகப் பாய்ந்து தடுத்தார். எந்த அணியும் கோல் அடிக்காமலேயே முன்பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

பின்பாதி ஆட்டம் ஆரம்பித்த முதல் பத்து நிமிடங்களுக்கும் பந்தை நீண்டதூரத்துக்கு தள்ளி (Long passing) விளையாடிக் கொண்டிருந்தனர். ஆனால் ஆட்டத்தின் பிரேஸில் நட்சத்திரம் ரிவால்டோ திடீரென ஒரு கோலை அடித்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார். இதனால் அதிர்ச்சியடைந்த பெல்ஜியம் அணி திணறிய சமயத்தைப் பயன்படுத்திய பிரேஸில் அணியின் மற்றொரு முன்னணி நட்சத்திரமான ரொனால்டோ ஆட்டம் முடிவடைவதற்கு மூன்று நிமிடங்களே இருக்கையில் ஒரு கோலை அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இறுதியில் 2-0 என்ற அடிப்படையில் பிரேஸில் அணி வென்றது. (ம)

## இன்று நடக்கும் ஆட்டங்கள்


சியோல்,ஜூன்18

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-


★ ஜப்பான் எதிர் துருக்கி (ஜப்பான் - பகல் 12.30)

★ தென்கொரியா எதிர் இத்தாலி (கொரியா - மாலை 5.30. (ம)


# தீவகத்தில் புலிகள்: சில காட்சிகள்....



ஊர்காவற்றுறை கடற்படைக் கட்டளைத் தளபதி சந்திரசிறி, கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஆகியோர் புலிகளுடன் உரையாடும் காட்சி.



புலிகளின் அடையாள அட்டையைப் படையினர் பதிவுசெய்கின்றனர்.



புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் (ஜவான்) மற்றும் புலிகளின் முக்கியஸ்தர்கள் அல்லைப்பிட்டியில் காத்து நிற்கின்றனர்.





அல்லைப்பிட்டியில் புலிகளைப் பொதுமக்கள் அழைத்துச்செல்வதையும் வரவேற்கத் திரண்டிருந்த மக்களையும் படங்களில் காணலாம்.



சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் போராளிகள் நுழையும் காட்சி.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நேற்று தீவகம் சென்றபோது எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு.

(படத் தொகுப்பு : தேவராஜன்)




சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகள் அகவணக்கம் செலுத்துகின்றனர்....



பெண் போராளி ஒருவரை மாணவர்கள் அழைத்து வரும் காட்சி .

வேலணை அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில்....





வாகனத்தோடு சேர்த்துப் புலிகளைக் கட்டித் தழுவும் பொதுமக்கள்....

# எங்கள் நாட்டைக் கட்டியெழுப்பிய பலம்

# லங்கா சிமெந்து

## பத்து வருடங்களின் பின்பு......

## உங்களுக்கு உதவுவதற்காக, "லங்கா சிமெந்தை" மீள்சந்தைப்படுத்துவதில் நாங்கள் பெருமையடைகின்றோம்.

இந்த வைபவத்தையொட்டி இன்று பி.ப 4 மணிக்கு லங்கா சிமெந்து நிறுவனமானது தனது முதல் உற்பத்தியை யாழ் நாக விகாரை, நல்லூர் கோயில் சாவகச்சேரி பள்ளிவாசல் மற்றும் மடு தேவாலயம் ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கு, கௌரவ அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மற்றும் Dr.ஜயலத் ஜயவர்த்தன ஆகியோரின் மூலம் நன்கொடையாக கையளிக்கின்றது.






இலங்கையின் சீமெந்து உற்பத்தியின் முன்னோடி நிறுவனங்களில் ஒன்றான இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம், [illegible] 1983 இல் [illegible] லங்கா சீமெந்து லிமிட்டெட் [illegible]

[illegible] 1990 இல் இதன் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

[illegible]

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



தொழில் முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் கொள்கை முதலீட்டு அமைச்சர் செயலாளர் அவர்களின் செய்தி.

[illegible]

திரு. [illegible]
செயலாளர்

## லங்கா சீமெந்து லிமிட்டட்

இல. 130 டபிள்யூ.ஏ.டி.ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02
தொலைபேசி: 01-541358, 01-342063
தொ. நகல் : 447541
ஈ. மெயில்: lclement@sltnet.lk
தொழிற்சாலை: சீமெந்து வீதி, காங்கேசன்துறை.
Sales hotline: 077 712277, 077 712288, 077 712299

உதயன்

# இரு பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு

அரசியலும் பொருளாதாரமும் சீராக இருந்தால்தான் எந்த நாடும் சுபீட்சம் அடைய முடியும்.

இங்கே இப்போது எல்லோரும் அரசியல் விவகாரங்களில் மூழ்கிப் போயிருக்கிறார்கள்.

போர்நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை, பேச்சு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சமாதானம் இவற்றைப் பற்றித்தான் இன்று பலரும் சிந்திக்கிறார்கள; பேசுகிறார்கள்.

அரசியல் சிந்தனைகளும் பேச்சுக்களும் பல தரப்பினர்களிடையேயும் பிரச்சினைகளை எழுப்பி வருகின்றனவே தவிர ஒரு தீர்க்கமான முடிவைத் தரவில்லை. எல்லாமே குழப்பிப்போய் இருக்கின்றன.

அதேவேளை, புற்றுநோய் உடலிலே பரவுவதுபோல பொருளாதாரப் பிரச்சினைகளால் ஏற்படும் விளைவுகள் சமூகத்தை ஊடுருவிக் கொண்டிருக்கின்றன.

வாழ்க்கைச் செலவு நாளும் பொழுதும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. அதற்குக் காரணம் பொருள்களின் விலை உயர்வும் சேவைக் கட்டணங்களின் அதிகரிப்பும்தான்.

எரிபொருள், மருந்து, பால்மா மற்றும் நாளாந்த உணவுப் பொருள்கள் மரக்கறி வகைகள், இறைச்சி எல்லாவற்றின் விலைகளும் உயர்ந்து கொண்டே போகின்றன.

எவ்வளவு பணத்தை கட்டிக்கொண்டு கிளம்பினாலும் வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் வாங்கி வீட்டுக்குக் கொண்டுவர முடிவதில்லை. எல்லாவற்றுக்கும் அதிக விலை கொடுக்க வேண்டியிருப்பதால் கையிலிருக்கும் பணம் போதாமல் போய்விடுகிறது.

பொருள்களுக்குமட்டுமா விலை உயர்வு? சேவைகளுக்கும் கூடுதலான கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. மின்சாரக் கட்டண உயர்வு, தண்ணீர்க் கட்டண உயர்வு, தனியார் பஸ் கட்டணங்கள் உயரப்போகின்றன, ரயில் கட்டணங்கள் கூட அதிகரிக்கப்படவிருக்கின்றன.

எவ்வளவு காலத்துக்கு மக்களால் இந்த விலை உயர்வுகளுக்கும் கட்டண அதிகரிப்புக்களுக்கும் ஈடுகொடுக்க முடியும்? இந்த வாழ்க்கைச் சுமையை அவர்களால் எப்பொழுதும் தாங்கமுடியுமா?

வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்கா ஓர் உபாயம் சொல்கிறார். பொருள்களின் விலை உயர்வுகளையும் சேவைகளின் கட்டண அதிகரிப்பையும் கட்டுப்படுத்த ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்த போகிறாராம்.

இந்த ஆணைக்குழு அதிக அங்கீகாரங்களை கொண்டதாக இருக்கும். ஆணைக்குழுவுக்கு தகுந்த காரணம் காட்டி அதன் அனுமதியைப் பெறாமல் எவரும் நினைத்தபடி பொருள்களின் விலைகளை உயர்த்தவும் கட்டணங்களை அதிகரிக்கவும் முடியாது என்கிறார் அமைச்சர்.

நாட்டின் பொருளாதாரம் படுபாதளத்தில் வீழ்ந்துள்ளதால் அரசாங்கமே சேவையில் உள்ள தனது ஊழியர்களின் சம்ளத்தையும், ஓய்வுபெற்ற ஊழியர்களின் ஓய்வூதியத்தையும் வாங்கிய கடனையும் கொடுக்க முடியாமல் மூக்கால் அழுகிறது. இந்த நிலையில் வர்த்தகர்களாலும் சேவைகளை வழங்குபவர்களாலும் ஆணைக்குழுவுக்கு காரணம் காட்டி காரியம் சாதிப்பது கஷ்டமா என்ன?

நாட்டில் உள்ளூர் மற்றும் வெளியுலக மூலதனத்துடன் தொழில்கள் பெருகவேண்டும். மக்களின் வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் வருமானம் உயர வேண்டும்.

இவை சாத்தியமாவதற்கு நாட்டில் இனப் பிரச்சினை தீர்ந்து பூரண அமைதி நிலவ வேண்டும்.

ஆகவே, அரசியல் பிரச்சினைக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கும் ஒருங்கே தீர்வு காண்பதற்கு சமாதான முயற்சிகளை துரிதப் படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

---

மானிப்பாய் லயன்ஸ் கழகம் நடத்திய

## கிளிநொச்சி மருத்துவ முகாமில் 1,250 பேருக்கு சிகிச்சையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரால் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் சுமார் ஆயிரத்து 250 பேர் சிகிச்சை பெற்றனர்.

இம்மருத்துவ முகாமில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த சத்திரசிகிச்சை, வைத்திய சிகிச்சை, கண் சிகிச்சை, பெண்ணோயியல் வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர், சிற்றூழியர்களைக் கொண்ட குழு கலந்துகொண்டு சிகிச்சைகளை வழங்கியது.

காலை முதல் பிற்பகல் வரை இடம்பெற்ற இம்முகாமில் கண் சத்திரசிகிச்சைக்கு 410 பேரும், ஏனைய சத்திர சிகிச்சைகளுக்கு 370 பேரும் தெரிவானதுடன், பெண்ணோயியல் தொடர்பாக 70 பேரும் ஏனைய வைத்திய சிகிச்சைகளில் 400 பேரும் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

இந்தச் சிகிச்சை முகாம் இனிவரும் காலங்களில் வன்னியின் ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-15)

---

மனை வளம் சிறக்க பனை வளம் காப்போம்

## மரநிழல்களில் அமர்ந்திருந்து உணவு உண்ணும் தெற்கு மக்கள்

தென்மராட்சி,ஜூன்18

தென்னிலங்கையிலிருந்து முகமாலையூடாக வரும் சிங்கள, முஸ்லிம் மக்கள் வீதியோரங்களில் உள்ள மர நிழல்களின் கீழிருந்து உணவு அருந்துவதை தினமும் காணக்கூடியதாக உள்ளது.

சமைத்த உணவினை வாகனங்களில் கொண்டுவரும் மகக்கள், கொடிகாமத்திற்கும் மீசாலைக்குமிடையில் உள்ள காணிகளில் ஆறஅமர இருந்து சாப்பிடுவதைக் காணமுடிகிறது.

தற்போது வீசும் காற்று மற்றும் அடிக்கடி செல்லும் வாகனங்களால் ஏற்படும் தூசிகள் ஆகியவற்றால் இவர்களது உணவு பாதிக்கப்பட்டு சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்படலாம் என பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்கள் ஆற அமர்ந்து உணவருந்தக் கூடிய வகையில் கொட்டகை எதுவும் அமைத்துக் கொடுக்கப்படாமை குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (ம-117)

---

# போக்குவரத்துத் திணைக்களத்தின் நடமாடும் சேவை இரண்டு தினங்கள்

## யாழ். செயலகத்தில் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஜூன்18

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடத்தும் நடமாடும் சேவை நாளையும், நாளைமறுதினமும் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இருநாள்களும் காலை 9மணிமுதல் சேவைகள் ஆரம்பமாகும்.

வாகனப்பதிவு செய்தல், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் உட்பட மோட்டார் வாகனங்கள் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்கி, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும்சேவையில் கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர், மேலதிக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பிரதம கணக்காளர், சிரேஷ்ட வாகனப் பரிசோதகர் மற்றும் வாகனப் பரிசோதகர்கள் மூவர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதல்நாள் சேவையின்போது, சுமார் 500 பேருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சையும், செயல்முறைப் பரீட்சையும் நடத்தப்படவுள்ளன. எனவே சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பம் பெற்றவர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பரீட்சைக்கான அனுமதிக் கடிதத்தை பெற்றுக்கொள்ளும்படியும் -

அத்துடன் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்தும் மற்றும் வாகனங்களை உடைமை மாற்றம் செய்தும், ஆறுமாத காலத்திற்குள் வாகனப் பதிவுப் புத்தகம் கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் 2001 மார்ச், ஏப்ரல் மாதங்களின் சாரதி அனுமதிப் பரீட்சையில் சித்திபெற்று இன்றுவரை சாரதி அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாதவர்கள் தமது முறைப்பாட்டுக் கடிதம் மற்றும் உரிய ஆவணங்களுடன் இருதினங்களும் சமுகமளித்துத் தீர்வைப் பெறலாம் என்றும் -

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ்.அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், மோட்டார் வாகன ஆவணங்கள் தொலைந்தமையால் புதிய [illegible] வாகன உடைமை மாற்றம் செய்ய [illegible] வாகன உரிமையாளர்கள் தமது முறைப்பாட்டுக் கடித[illegible] நேரில் வந்து தமது பிரச்சினைகளை முன்வைக்கலாம் என்றும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர்.(ஒ-3)

---

ஆட்சிக் கலைப்பைத் தடுப்பதற்கு

# திடீர் பொதுத்தேர்தல் நடத்த ஐ.தே.கட்சி தயாராகின்றதாம்

கொழும்பு,ஜூன்18

அரசியலில் ஸ்திரமான நிலையொன்றைப் பெற்று அரசைப் பலப்படுத்தும் நோக்கில் ஐ.தே.கட்சி இந்த ஆண்டு இறுதிக்குள் பொதுத்தேர்தலை நடத்த திட்டமிட்டு வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்து, எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதியுடன் ஒருவருட காலமாகிறது. அதன் பின்னர் அரசைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அதனைப் பயன்படுத்தி ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடும். அந்த அதிகாரத்தை நீக்க அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியமாகிறது. தற்போதைய நிலைமையில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவதில் வெற்றி பெறமுடியாத ஒரு நிலை ஏற்படுமாயின் அதனைச் சமாளிக்க திடீர்ப் பொதுத் தேர்தலை நடத்துவது பற்றி ஐக்கிய தேசிய முன்னணி அரசு மிக ஆழமாகச் சிந்திப்பதாகக் கூறப்படுகிறது.

மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை அரசுக்கு கிட்ட எதிர்க்கட்சியிலிருந்து சுமார் இருபது உறுப்பினர்களின் ஒத்துழைப்பினை ஐ.தே.க. பெறவேண்டும். ஆனால் அது நம்பிக்கையற்ற விடயமாகவே உள்ளது.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரையில் பிரதமரும் மற்றும் அமைச்சர்கள் பலரும் ஒரு திடீர் பொதுத்தேர்தல் நடத்துவதன் மூலம் குறைந்தபட்சம் பத்து முதல் பதினைந்து மேலதிக ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கைப்பற்றலாம் என நம்புவதாகத் தெரியவருகிறது. ஏனெனில் ஐ.தே.மு. அரசு தற்போது முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கையை மையமாக வைத்து திடீர் தேர்தலின்போது பிரசாரங்களை மேற்கொண்டால் பொதுமக்களின் பேராதரவு கட்டாயமாகக் கிடைக்குமென்றும் -

அதனால் மேலதிக ஆசனங்களைப் பெறத் தமக்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் - ஐ.தே.கட்சி நம்பிக்கை கொண்டிருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

---

# குடாநாட்டின் விநியோகத்துக்கு சூரிய சக்தியிலிருந்து மின்சாரம்

## ஆண்டிறுதிக்குள் திட்டம் நடைமுறையாம்

கொழும்பு,ஜூன்18

சூரிய சக்தியைப் பயன்படுத்தி அதன்மூலம் மின்சாரம் பெறும் முறையைப் பயன்படுத்தினால், யாழ் குடாநாட்டில் ஓரளவு திருப்திகரமான மின்சார விநியோகத்தை வழங்க முடியும் என்றும் -

இந்த நடவடிக்கை அனேகமாக இந்த வருட இறுதிக்குள் சாத்தியப்படலாம் என்றும் - இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்த நடைமுறைக்கு அதிகளவில் நிதி தேவைப்படும் போதும், இத்திட்டம் வருட இறுதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்படும் சாத்தியம் உள்ளதாக அந்த வட்டா ரங்கள் மேலும் தெரிவித்தன.

தென்பகுதிகளில் சில கிராமப்புறங்களுக்கு கடந்த 1999 இல் சுமார் 300 யூனிட்டுக்கள் வழங்கப்பட்டன. பின்னர் 2000 ஆம் ஆண்டில் அது 1800 யூனிட்டுக்களாக அதிகரிக்கப்பட்டன. இப்பகுதிகளில் மின்சார பாவனை மேலும் அதிகரித்துவருகின்றது.

இவ்வாறு அதிகரித்து வரும் மின்சாரத் தேவையை சமாளிக்க சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் பணி தனியார் நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலையில் இலங்கை மின்சார சபையால் 50 சதவீதமளவிலேயே நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய முடிகிறது. மீதி 50 சதவீதத்தை நிறைவு செய்வது என்பது சபைக்கு பல ஆண்டுகள் ஆனாலும் கடினமான விடயமே என்றும், அதனாலேயே சூரிய சக்திமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

---

**நாளை**

ஆனி 5
புதன்கிழமை
(19.06.2002)
திதி : நவமி
பிற்பகல் 2.25 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பிற்பகல் 4.48 வரை.
சுபநேரம் : 4.24 - 5.54
ராகுகாலம் : 11.54 - 1.24
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அரசன் கைகளுக்கு விலங்கு போடுகிறான், புரோகிதன் அறிவுக்கு விலங்கு போடுகிறான்.

# யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர்

# சேவைநயப்பு வி

## யாழ்.ஆயரின் வாழ்த்துச் செய்தி

புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக 10 வருடங்களுக்கு மேலாக சிறந்த சேவையாற்றி, தற்போது இளைப்பாறும் அருட்தந்தை A.I.பேணாட் அவர்களின் சேவையை மறக்கலாகாது. குறிப்பாக சமகாலத்துப் போரின் அனர்த்தங்களால் யாழ்குடாநாடு மிகவும் மோசமாக இருந்த பொழுது மனம் தளராமல் சிறந்த மாலுமியைப் போன்று கல்லூரியை வளர்ச்சியிலும், தொடர்ந்து செயற்பாட்டிலும் முழு மூச்சுடன் உழைத்த பெருமை இவரையே சாரும். இராணுவ அழுத்தங்கள் ஒருபுறம், பணக்கஷ்டம் மறுபுறம். இவற்றின் மத்தியிலும் மனம் தளராமல் தனது கடமைகளை சிறப்புடன் ஆற்றியிருக்கிறார். 1995ஆம் ஆண்டு நடந்த இடம்பெயர்வின் பொழுதும், அதன் பின்பு 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடம்பெயர்வின் போதும் ஆசிரியரையும், மாணவரையும் ஒன்று திரட்டி கல்வியை வளர்த்தது இன்றும் நினைவு கூரப்பட வேண்டியது. எனவே இவரது பணிகளுக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து இவரது எதிர்காலப் பணிகள் அனைத்தும் சிறக்க வாழ்த்துகிறோம்.

யாழ். ஆயர்.

## வாழ்த்துரை

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் வாழ்த்துரை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எம் கல்லூரியில் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேல் இருள் நிறைந்த சூழ்நிலையில் பாரிய பொறுப்பான அதிபர் பதவியை அருட்தந்தை R.I.பேணாட் M.A. ஏற்றார். இவர் உந்து சக்திமிக்க ஆளுமையுடன், அர்ப்பணிப்புடன் ஆற்றிய பெரும்பணியைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் உவப்பிலா உவகையடைகிறோம்.

யாழ். குடாநாட்டில் போர்க்காலச் சூழ்நிலை தீவிரமடைந்த வேளையிலும் இடம்பெயர்வினால் இரு இடங்களில் கல்லூரியின் பாரம்பரியத்தை அணுவளவும் பிசகாமல் 'துணிவே துணை' என்று, பாடசாலை பௌதிக வளங்கள் குன்றியிருந்தும் மன வலிமை குன்றாமல் கல்லூரிச் சமூகத்தைக் கடின உழைப்பினால் திறம்பட நிர்வகித்த அதிபரையிட்டு மகிமையும் பெருமையும் அடைந்தோம்.

S.P.C. - O.B.A.இல் இவர் தலைவர் பதவி ஏற்ற காலம் தொடக்கம் இன்று வரையும் சகல உறுப்பினர்களையும் பற்றுப்பாசத்துடன் அரவணைத்து கல்லூரியின் சகல நிகழ்ச்சிகளிலும் எம்மையும் இணைத்து முன்னோடியாகத் திகழ்ந்தார்.

கல்லூரிப் பணியிலிருந்து இவர் ஓய்வு பெற்ற பொழுதும், இனி ஏற்கவிருக்கும் புதிய சமய, சமூகப் பணிகளில் சீருஞ்சிறப்பும் பெற்று, கலங்கரை விளக்காகத் திகழ வேண்டிய அருள்வளங்களை நிறைவாகக்கிடைக்க எம் செபத்தில் உருக்கமாக இறைஞ்சுவதோடு, பழைய மாணவர் சங்கம் சார்பில் எம் அன்பும் நன்றிகலந்த வாழ்த்துக்களையும் நவிலுகிறோம்.

யேசுவின் பணிவளர்க, நீடூழிவாழ்க. **அருட்தந்தை லூயிஸ் பொன்னையா,**
*O.M.I. முதுநிலை உப-தலைவர் S.P.C. - O.B.A.*

## கல்விப் பாரம்பரியத்தில் ஒரு மைற்கல்......

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண.பிதா பேணாட் அவர்கள் யாழ்.கல்விப் பாரம்பரியத்திற்கு ஒரு மைற்கல்லாவார். இவர் லண்டன் பல்கலைக்கழக கல்வி முதுமானியும், 'மனித உரிமைகள்' பட்டப்பின் டிப்ளோமா பட்டதாரியும் ஆவார். இவர் மனித உரிமைகள் தொடர்பாக காட்டிய முன்மாதிரிகளும், ஆங்கில மொழியைக் கையாளும் ஆளுமையும் நியமமாக்கப்பட வேண்டியவையே. யாழ். கத்தோலிக்க மனித நேய ஆணைக்குழுவின் தலைவராகப் பணியாற்றிய காலத்துள் பொதுமக்கள் குரலாய் எது நீதியானதோ, எது நேர்மையானதோ, எது உண்மையானதோ அது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில்' காட்டிய ஆர்வமும் தனிநபர் சுதந்திரம், விடுதலை தொடர்பாக அவர் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கைகளும் அவரை வேறுபடுத்தியதுடன், உலக அரங்குகள் அவரை அழைத்து அபிப்பிராயங்களை ஆராய முற்பட்டன. 1989இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகக் கால் பதித்து, 1992இல் அதிபராகப் பொறுப்பேற்று கடந்த 10 வருடங்களாக கடமையாற்றிய காலத்துள் வரலாறு காணாத இடுக்கண்களை பாடசாலைகள் எதிர்நோக்கிய வேளையில் கல்லூரியை, கல்வி விழுமியங்களை, கல்விப் பாரம்பரியங்களை, யாழ்.கல்விச் சமூகத்தை நீதி, நேர்மை, நெஞ்சுரத்துடன் வழிநடத்தியமை யாழ்.மக்கள் அறிந்ததே. சிறப்பாக எமது யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளில் இணைபாட செயற்பாடுகளில் - மாணவ ஆளுமை உருவாக்கத்தில் - சீர்மியப்படுத்தல்களில் - நல்கிய ஒத்துழைப்புகளும், ஆலோசனைகளும் என்றும் நினைவு கூரத்தக்கவையே.

இவர் பாடசாலை அதிபர்களுக்கு ஒரு முன் உதாரணம். சகோதர பாடசாலைகளுக்கு உறுதியான நேசக்கரம். மாணவர்களுக்கு கண்டிப்பும் கருணையும் கொண்ட ஓர் அன்புள்ளம். கல்வியாளர்களுக்கு ஆசிரியவாண்மை கொண்ட ஒரு வழிகாட்டி, திருக்குடும்ப கன்னியர் சபைக்கு இணைந்துகொண்ட சகோதரபலம், மக்களுக்கு மானுடம் காக்கும் காப்பரண். இவர் ஆற்றிய பல சேவைகளுக்கு நன்றிகூறி புனித பத்திரிசியார் அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறி ஏற்கவிருக்கும் புதுப் பொறுப்பில் பொலிவுபெற வாழ்த்துகின்றேன்.

**Sr.YOLANDE**
*Principal, Holy Family Convent, Jaffna.*

## ஆசிரியர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

புகழ்பூத்த எமது கல்லூரியின் முப்பொன்னாண்டுகால வரலாற்றில் கடந்த பத்தாண்டுகள் தமிழ் மண் யுத்த அரக்கனின் பிடியில் சிக்கிச் சீரழிந்த மிக நெருக்கடியான காலமாகும். இந்தக் காலகட்டத்தில் எங்கள் அதிபர் தமிழ் மக்களின் இடையீடு அற்ற கல்விப் பணிக்காக ஆற்றிய சேவையையும், ஈழத்தமிழரின் நலனுக்காகச் சர்வதேச அரங்கில் குரல்கொடுத்து வருவதையும் பாராட்டி வாழ்த்தி நிற்கும் இவ்வேளையில், அவரின் மனித நேயம்மிக்க சேவை என்றென்றும் இம்மண்ணில் நிலைக்க இறை ஆசி வேண்டுகின்றோம்.

கு.பிரான்ஸிஸ்
தலைவர், ஆசிரியர் சங்கம்
*யா/புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

**LOYALAS**
*185, Main Street, 4th Cross Street Junction, Jaffna.*

**S.S.MARIYATHAS & FAMILY**
*Jaffna.*

**JAFFNA SCHOOL'S CRICKET ASSOCIATION (JSCA)**

**LAVANIA**
**Dental and Optical Service**
*552, Hospital Road, Jaffna. & Yarl Road, Nelliady.*

**A.THARMARAJAH & FAMILY**
*56, AV, 3rd Lane, Ariyalai.*

**PATRICIAN INSTITUTES**
*59, St. Patrick's Road, Jaffna.*



**Rev.FR.A.I.B**

*B.Ph.(Poona),L.*
*B.Th.(Poona), L.*
*Dip. in Ed. & H.Rts., M*

## நடந்துவந்த

1. பிறப்பு ~ 11.06.1946
2. ஆரம்பக்கல்வி ~ றோ.க.த.க.பாடச
   ~ புனித சாள்ஸ் ம
3. இரண்டாம் நிலைக் கல்வி ~ புனித
   யாழ்
4. மெய்யியல் கல்வி ~ பாப்பரசர் குரு
5. இறையியல் கல்வி ~ பாப்பரசர் குரு
6. குருவாக திருநிலைப்படுத்தல் ~ பு
7. உப அதிபர், புனித அந்தோனியார் கல்
8. பகுதித் தலைவர் ~ மேற்பிரிவு ~ பு
9. உதவிப் பங்குத் தந்தை ~ அச்சுவே
10. விரிவுரையாளர், தேசிய குருத்துவக்
    அம்
11. உயர் கல்வி ~ 1978 ~ 1981.
12. தேசிய குருத்துவக் கல்லூரி, அம்பி
13. உயர்கல்வி ~ லண்டன் பல்கலைக்
14. 1. கல்விப்பணி ~ புனித பத்திரிசியா
    2. விரிவுரையாளர் புனித சவேரியார்
15. உப அதிபர் ~ புனித பத்திரிசியார்
16. அதிபர் ~ 1992 ஆனி.
17. குருத்துவ வெள்ளி விழா ~ 1995.
18. இளைப்பாறுதல் ~ 2002.06.10.

# ர் அருட்திரு. அ.இ.பேணாட் அடிகளாரின்
# விழாச் சிறப்பிதழ்

## ஆழ்ந்த ஆங்கிலப் புலமையாளர்


வண.ஏ.ஐ.பேணாட் அடிகளார் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், ஒரு தசாப்த காலம் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். ஆழ்ந்த ஆங்கிலப் புலமையும் அதற்கு இணையான தமிழ்ப் புலமையும் உடைய இவர் சிறந்த முகாமையாளராக விளங்கி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், கல்லூரியின் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிய பெருமையுடையவர்.

அதிபராக இருந்த வேளையிலும் தானே கற்பித்தலில் ஈடுபட்டு மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தியவர். இவர் காலத்தில் கல்லூரியின் பெறுபேறுகள் அதிகரித்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இவர் கல்விப் பணி, சமூகப் பணி என்பவற்றுடன் ஆத்மீகப் பணியிலும் ஈடுபட்டு சமூகவளர்ச்சிக்குத் தொண்டாற்றினார்.

இவர் கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்றாலும் இவரின் கல்விப் பணி, ஆத்மீகப் பணி, சமூகப் பணி என்பவை மேலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வலயக் கல்விப் பணிப்பாளர், *யாழ்ப்பாணம்.*



## .I.BERNARD

*a),L.Ph.(Poona),*
*a), L.Th.(Poona),*
*Rts., M.A. (Ed.) (Lond.)*

## எம்மை விட்டுப் பிரியாத பிரிய எம் அதிபர்
# அருட்திரு.அ.இ.பேணாட் அடிகளார்!

இன்றைய தினம் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு.அ.இ.பேணாட் அடிகளாரின் பிரியாவிடை தினமாகும். கல்விச் சிந்தனையாளரும் சமூக சீர்திருத்தவாதியுமாக தந்தையவர்கள்,எமது தமிழ்ச் சமுதாயத்தின் விலைமதிக்க முடியாத சொத்து என்றால் மிகையாகாது.

தந்தையவர்கள் தனது ஆரம்பக் கல்வியை தாளையடி பாடசாலை, யாழ்.புனித சாள்ஸ் வித்தியாலயம் ஆகியவற்றில் பயின்றார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் புனித மாட்டினார் குருமடத்தில் இணைந்ததுடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் கனிஷ்ட இடைநிலைக் கல்வியையும் மேற்கொண்டார். சிறு வயதிலிருந்தே தான் எதிர்காலத்தில் ஒரு கத்தோலிக்க மதகுருவாக விளங்கி இறைவனின் அழைப்பை மகிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை அடிமனதில் கொண்டிருந்தார். புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியை செவ்வனே பெற்று 1963ஆம் ஆண்டு மேற்படிப்பைத் தொடர இந்தியா பயணமானார்.

இந்தியாவில் தத்துவம், இறையியல் ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற்று, 1970ஆம் ஆண்டு அங்கேயே குருத்துவப் பட்டத்தையும் பெற்றார். தந்தையின் குருத்துவப்பணி இலங்கையில் பல்வேறு இடங்களிலும் தொடர்ந்தது ; மிளிர்ந்தது. அத்துடன் இவர் தாளையடி, வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் முதல் குரு என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வியைத் தொடர்வதற்காக இங்கிலாந்து சென்று தத்துவம், சைவசித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றுத் தேறினார். "மனித உரிமைகள்" என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப்பெற்றார். அதனைத் தொடர்ந்து கல்வியில் "விஞ்ஞானமும் சமயமும் மெய்யியல் நோக்கில் ஓர் ஒப்பீடு" என்ற ஆய்வில் முதுகல்விமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

01.11.1989இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகத் தன்னை இணைத்துக் கொண்டு தான் கல்வி கற்ற கல்லூரிக்குச் சேவையாற்றத் தொடங்கினார். 1992ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அருட்திரு.பிரான்ஸிஸ் யோசப் அடிகளார் ஓய்வுபெற்ற போது அவரின் பணியைத் தொடர்வதற்குப் பணிக்கப்பட்டுப் புதிய அதிபரானார். கல்விச்சேவையின் ஊடாகத் தனது குருத்துவப் பணியை ஏற்று, குருத்துவ அழைத்தலையும், பெரும் பொறுப்பையும் தன்னுடன் இணைத்துக்கொண்டார்.

சொல்லிலும் செயலிலும் கல்வியைப் பொறுத்தவரையில் மூன்று பிரதான இலட்சியங்கள் அதிபர் தந்தையினால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. எமது சமுதாயத்தின் குறுகிய மனப்பான்மையைத் தகர்த்து உயர்ந்த மனப்பாங்கினை ஏற்படுத்துவதினூடாகச் சகோதரத்துவத்தையும் புரிந்துணர்வையும் வளர்ப்பது.
2. மாணவரைச் சமூகத்திற்கு ஏற்ற பயனுள்ள முழு மனிதர்களாக உருவாக்குவது.
3. முறைசாராக் கல்வியையும் விருத்திசெய்து கொள்வது. இதன் மூலம் சமூகத்தில் கிடைக்கக்கூடிய அருந்தலான வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துவது.

கல்வித்துறையில் சிறந்த நிர்வாகியும் நேர்மையுடன் கண்டிப்பும் நிறைந்தவர் என்ற பெயரையும் பெற்ற அதிபர் அவர்கள், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமிழீழ மண்ணிற்கும் ஒரு வரப்பிரசாதம் என்று கூறினால் அது என்றும் தகும். விளையாட்டுக்கள், இசை, நாடகம் போன்ற துறைகளும் அதிபர் தந்தைக்கு மிகப் பிடித்தமான துறைகளாகும். ஆங்கிலத்திலும் தமிழிலும் நிறைந்த புலமையுடையவராகத் திகழும் அருட்தந்தையின் குருத்துவ வாழ்வையும் தியாக சிந்தையையும் எழுதுவதாயின் அது விரிந்து செல்லும். மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து நீதியுடனும் சகிப்புத் தன்மையுடனும் பணியாற்றும் வல்லமை கொண்டவர்.

சகல பிரச்சினைகளையும் சமநிலையுடன் அனுகும் பண்பும் கொண்டவர். 1995.10.19இல் தந்தையின் குருத்துவ வெள்ளி விழா புனித பத்திரிசியார் கல்லூரியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

"இறை பற்றும் கடின உழைப்பும்" என்ற கல்லூரி வாசகத்திற்கேற்ப மாணவர்களை நல்வழிப்படுத்திச் சமுதாயத்தின் மேன்மையையும் விழுமியங்களையும் உயர்த்த வேண்டும் என்ற விருப்புக்கொண்டு, அவற்றைக் கல்லூரி மட்டத்தில் நடைமுறைப்படுத்தினார். ஆசிரியர், மாணவர் தொடர்புகளை நன்முறையில் பேணி, ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிப்பதற்கு அதிபர் தந்தையவர்கள் மேற்கொண்ட நுட்ப முறைகள் சிறப்பானவை. இவருடைய பதவிக்காலத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் முன்னர் போன்று பல சாதனைகளை ஈட்டியது. க.பொ.த. (உயர்தரம்), க.பொ.த. (சாதாரணதரம்), ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளில் சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒழுக்கம், கட்டுப்பாடு, பணிவு, பெரியோரைக் கனம் பண்ணுதல் ஆகியன தொடர்ச்சியாகக் கல்லூரியில் நிலை நிறுத்தப்பட்டன.

சமூக நீதி (Equity), வர்க்க வேறுபாட்டைக் களைதல் என்பவற்றிலும் அடிமட்டத்தில் வாழும் (Grass root Level) மக்களுக்கு உதவி செய்வதிலும் முன்னின்று உழைத்தவர் அருட் தந்தையவர்கள். தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும், நீதி சமாதானத்திற்காக, மனித மாண்பிற்காக, மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தந்தையவர்கள் ஸ்தாபன ரீதியாகச் செயற்பட்டுவருவதனையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

எமது தமிழ்ப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கல்விசார் நடவடிக்கைகள் பரந்த தத்துவத்தின் அடிப்படையில் மலர்வதுடன் இறைநம்பிக்கையுடைய நற்பிரசைகளைத் தோற்றுவிப்பதாகவும் அமைதல் வேண்டும் என்பது தந்தையவர்கள் அடிக்கடி கூறுகின்ற வார்த்தைகளாகும்.

எனவே, இன்றைய பிரியாவிடை நிகழ்வில் அதிபர் தந்தைக்கு நாமெல்லோரும் நல்வாழ்த்துக் கூறுவதுடன் அவரின் குருத்துவப் பணி, சமூகப் பணி ஆகியன செவ்வனே தொடர எல்லாம்வல்ல இறைவனின் அருள் கிடைக்கப்பிரார்த்திக்கின்றோம். ☆

## ...ந்த பாதை!

...க.பாடசாலை ~ தாளையடி
...ாஸ் மகா வித்தியாலயம்.
... ~ புனித பத்திரிசியார் கல்லூரி
... யாழ்ப்பாணம் ~ 1956 ~ 1962.
...ரசர் குருமடம் (புனே) ~ 1963.
...பரசர் குருமடம் (புனே) ~ 1967.
...ல் ~ புனே (இந்தியா) 19.10.1970.
...ியார் கல்லூரி, ஊர்காவற்றுறை 1971~1972.
...வு ~ புனித பத்திரிசியார் கல்லூரி ~ 1973.
... அச்சுவேலி ~ 1974.
...நத்துவக் கல்லூரி
அம்பிட்டியா ~ 1974 ஐப்பசி.
... 1981.
...ரி, அம்பிட்டியா 1982.
...ல்கலைக்கழகம் 1983.
...த்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
...வேரியார் குருத்துவக் கல்லூரி ~ 1989.
...ிரிசியார் கல்லூரி ~ 1992 சித்திரை.

... ~ 1995.10.19.
...06.10.

(c/22554)

யேசுதாசன் பல்பொருள் வியாபார நிலையம்
சென்.பற்றிக்ஸ் சந்தி,
பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

MR.NAVARATNARAJAH & FAMILY
*Bankshal Street, Jaffna.*

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

FOOTBALL LEAQUE (J.F.A.)
*Jaffna.*

BASKET BALL ASSOCIATION
*Jaffna District.*

OLD BOYS' ASSOCIATION
*St.Patrick's College, Jaffna.*

# வழக்கு ஆவணங்களை பொலீஸார் தமிழில் சமர்ப்பிக்க நடவடிக்கை

## நீதிவான்களின் கருத்தரங்கில் வலியுறுத்து

குடாநாட்டு நீதிமன்றங்களில் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பான ஆவணங்களை தமிழிலேயே சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9.45 மணிக்கு மாவட்ட நீதிவானின் உத்தியோக பூர்வ அறையில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் மல்லாகம் மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம், யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் ஆகியோருடன் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலஸ் அத்தியட்சகர் பலிப்பிறேமரத்ன, காங்கேசன்துறை உதவி பொலீஸ் அத்தியட்சகர் எல்.ஜெயசேகரா ஆகியோர் உட்பட குடாநாட்டில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தத்தின் கீழ் தமிழ் உத்தியோக பூர்வமான மொழியாக்கப்பட்டுள்ளதையும், 16ஆம் திருத்தத்தின் கீழ் உத்தியோகபூர்வ மொழியான தமிழ் மொழி, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகவும், பொது ஆவணங்கள் பேணப்படும் மொழியாகவும், அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உத்தியோகபூர்வ மொழியான தமிழ்மொழி நீதிமன்ற நிர்வாக மொழியாகவும் பதிவேடுகளும் ஆவணங்களும நடவடிக்கைகளும் உத்தியோகபூர்வ மொழியான தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டும் என்பது தற்போது அரசமைப்பின் தேவைப்பாடாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கு அமைய நீதி மன்றங்களில் பொலீஸாரினால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகளும் பிராதுகளும், குற்றச்சாட்டுப் பதிரங்களும் குடாநாட்டு நீதிமன்றங்களில் தமிழ்மொழியில்தாக்கல் செய்ய ஏதுவாக சகல பொலீஸ் நிலையங்களிலும் குறைந்தது ஒருவராவது தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்ற பொலீஸ் உத்தியோகத்தராக நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இது சம்பந்தமாக பொலீஸ்மா அதிபருடன் தொடர்புகொண்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலீஸார் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது நடைமுறைக்குவந்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாக இதுவரை காலமும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் நீதிமன்ற பணிப்புரைகளையும் கட்டளைகளையும் நிறைவேற்றவும் ஏதுவாக தற்போது பொலீஸாருக்கு எதுவித தடங்கலும் இன்றி கடமையாற்றக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதை கவனத்திற்கு எடுத்து குடாநாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பூரணமாக நிலைநாட்ட பொலீஸார் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேணடும் - என்று வலியுறுத்தப்பட்டது.

பொதுமக்களால் புகார் செய்யப்படும் குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகளும் விசாரணைகளும் பொலீஸாரால் துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

வீதிகளில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டியில் செல்வோர் மீது பொலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உரிய பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

வாகனங்களில் மேலதிகமான ஆள்களை ஏற்றிச்செல்வது சம்பந்தமாக சகல பொலீஸ் நிலையங்களும் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை உறுதியாக அமுல்படுத்தும் நடவடிக்கைகள் முதற்கட்டமாக யாழ்.மாநகரசபை எல்லைக்குள நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்பட்டது.

வைத்தியசாலைகள், பாடசாலைகள், நீதிமன்றங்கள் போன்ற இடங்களுக்கு முன் உரிய அமைதியைப் பேணுவதற்கு ஏதுவாக வாகனங்கள் எழுப்பும் ஒலிகளை தவிர்ப்பதற்கு ஏற்ற ஒழுங்கு விதிகளும் பொலீஸாரால் விசேட அமுலாக்கத்திற்குக் கொண்டுவருவதென அறிவுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களின் விரைவான அமுலாக்கலை கவனத்தில் எடுத்து இக்கலந்துரையாடலின் விரிவான அறிக்கை நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கும் பொலீஸ் மா அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (ஒ)

## கல்வியியல் கல்லூரி தினம்

யாழ்ப்பாணம்,ஜுன்18

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மனிதவள விருத்தி, கல்வி கலாசார அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கும் -

கௌரவ விருந்தினராக மனிதவள விருத்தி, கல்வி கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜாவும் -

சிறப்பு விருந்தினர்களாக கல்வியியல் கல்லூரிக் கிளையின் பிரதம ஆணையாளர் எம்.இப்ரகீம், மனிதவள விருத்தி, கல்வி கலாசார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் டி.வசநாயக்காவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் கல்விக் கல்லூரியின் 'கலாசுரபி' மலர் வெளியீடும் நடைபெறும் (ம-180)

## சூறையாடப்பட்டுவரும் சித்தமருத்துவ விடுதி!

கைதடி,ஜுன்18

கைதடியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையின் விடுதிக் கட்டடம் திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகியுள்ளது.

1999ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இவ்விடுதி மாணவர்களின் பயன்பாட்டிற்கு பயன்படாதநிலையில் 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய யுத்த நடவடிக்கையின்போது பலத்த சேதங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இப்போது இரவு ஊரடங்குச் சட்ட நீக்கம் மற்றும் கவனிப்பாரற்ற நிலை போன்றவற்றைப் பயன்படுத்தி விடுதிக்குள் நுழையும் திருடர்கள் அங்குள்ள பொருள்களை திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டிலே தோன்றியுள்ள சமாதானச் சூழ்நிலையிலும் இவ்விடுதியை திருத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-13-ரி)

## உடுவில் கல்விக் கோட்ட அதிபர், ஆசிரியர்க்கு

உடுவில் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பிரச்சினைகள், தேவைகள் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் எனவும் -

மேற்படி பாடசாலைகளின் சகல அதிபர், ஆசிரியர்களும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

## சுப்பிரமணியம் பூங்கா புனரமைப்பு

யாழ்.மாநகர சபையின் சுகாதாரக் குழுவின் ஏற்பாட்டில் யாழ்பழைய நீதிமன்றப் பகுதியில் எதிர்வரும் 21ஆம் திகதி சுத்திகரிப்புப் பணி நடைபெற்றுள்ளது. அன்றைய தினம் நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாத சுப்பிரமணியம் பூங்காவை புனரமைப்புச் செய்யும் பணி ஆரம்பிக்கப்படும் என்று மாநகரசபை சுகாதாரக் குழுத் தலைவர் தெரிவித்தார். (ஒ-ரி)

# திட்டங்களை செயற்படுத்துவதில் யாழ்.மாநகரசபையில் பாரபட்சம்

## உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜுன்18

யாழ்.மாநகர சபையினால் உறுபபினர்களுக்கென வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களில் குறிப்பிட்ட ஒரு கட்சியின் உறுப்பினர்கள் முன்மொழியும் வேலைத் திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதாக மாநகரசபை உறுப்பினர் எஸ்.ஜெயச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

2000ஆம் ஆண்டுக்கான மாநகர சபை உறுப்பினர்களின் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியில் எம்மால் முன்வைக்கப்பட்ட வீதிப் புனரமைப்புகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, ஒரு கட்சியின் உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்கள் உடனுக்குடன் நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாறான பாரபட்சம் காட்டப்படும் நிலைமையைத் தவிர்த்துச் செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் மாநகர சபை நிர்வாகத்தில் வேலைத் திட்டங்களை இலகுவாக நிறைவேற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

# 'எற்கின் ஸ்பென்ஸ்' சேவை யாழ்.குடாநாட்டில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,ஜுன்18

'எற்கின் ஸ்பென்ஸ்' குழுமத்தின் கிளை அலுவலகங்கள் நாளை புதன கிழமை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட உள்ளன.

50 சேவைப் பிரிவு நிறுவனங்களைக் கொண்ட 'எற்கின் ஸ்பென்ஸ்' குழுமம், 'எற்கின் ஸ்பென்ஸ் ஓவசஸ் சேவிஸஸ்' மற்றும் 'ஏஸ் கார்கோ' ஆகியவற்றின் அலுவலகங்களை யாழ்.நகரில் ஆரம்பிக்கிறது.

வெளிநாட்டுப்பயண ஒழுங்குகள் மற்றும் அங்கு தங்கும் வசதிகள் உட்பட இவை தொடர்பான பல்வேறு சேவைகளை 'எற்கின் ஸ்பென்ஸ் ஓவசீஸ் சேவிஸ்' வழங்குகிறது.

சர்வதேச ரீதியில் பொருள்களை அனுப்புதல் மற்றும் கூரியர் சேவை போன்றவற்றை 'ஏஸ் கார்கோ' மேற்கொள்கிறது. (ஒ-13)

# குருநகர் களஞ்சியத்தில் கதவுகள் திருடப்பட்டன

வலி வடக்கு,ஜுன்18

யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குச் சொந்தமான குருநகர் களஞ்சியக் கட்டடத்தின் கதவுகள் திருடப்பட்டு பின்னர் மீட்கப்பட்டன.

அப்பகுதி கிராம அலுவலர் செ.ஞானசேகரம் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்தே திருடப்பட்ட கதவுகள் சன நடமாட்டம் அற்ற காணி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டு செயலக பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இக்களஞ்சியத்திற்கு போடப்பட்டிருந்த சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கூரைத்தகடுகள் ஏற்கனவே திருட்டுப் போயுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக கிராம அலுவலரினால் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-86)

# 3 நாள்களில் குழந்தைக்கு ஏற்றும் பி.சி.ஜி. தடுப்பு மருந்துக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜுன்18

பிரசவமாகி 3 நாள்களுக்குள் குழந்தைக்கு போடப்படும் பி.சி.ஜி தடுப்பூசி மருந்துக்கு யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். மத்திய மருந்தகம் ஆகியவற்றில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரசவமாகும் குழந்தைகள் இத்தடுப்பூசி மருந்தைப் போடாத நிலையிலேயே செல்ல வேணடிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலையில் சராசரி தினமும் 15 குழந்தைகள் பிரசவமாவது குறிப்பிடத்தக்கது.

யாழ்.போதனாவைத்தியசாலை மற்றும் மத்திய மருந்தகத்திற்கு கடந்த வார இறுதியில் தரைவழியாக அனுப்பி வைக்கப்பட்ட மருந்து வகைகளிலும் இம்மருந்து அனுப்பி வைக்கப்பட வில்லை. (ம-15)

## கட்டுநாயக்கா தாக்குதல்:

# ஏழு தமிழ்க் கைதிகளையும் பிணையில் விடக்கோரி மனு

கொழும்பு,ஜுன்18

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 7 இளைஞர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் யாவும் சட்டமா அதிபர் சே.சி.கமலசபேசனிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இம் மனுக்களை ஆராய்ந்த சட்டமா அதிபர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் ஒருவரான யூட் நிக்ஷன் என்பவரைப பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து இது தொடர்பாக நீர்கொழும்பு நீதிவானுக்கும் எழுத்து மூலம் அறிவித்தார்.

ஏனையோரைப் பிணையில் விடுவிப்பது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் -

இவர்களில் கடும் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இருவர் தொடர்பான சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையைப் பெறுமாறும் -

உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழிகாட்டி செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜுன்18

வடக்கு - கிழக்கு மாகாண ஆரம்பப்பிள்ளைப் பருவப் பிரிவிலே பதியப்பட்ட 2ஆயிரத்து 932 முன்பள்ளிகளில் சேவையாற்றும் 4ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வள வழிகாட்டி செயலமர்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து முன்பள்ளிகளுக்கும் 'விளையாட்டல்லாத விளையாட்டு' எனும் வள வழிகாட்டியினை இலகுபடுத்த 3 நாள்களுக்கு வதிவிடச் செயலமர்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்செயலமர்வுக்காக 9 கல்வி மாவட்டங்களிலும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் 71 முன்பள்ளி ஆசிரிய பயிற்றுநர்களும் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினரால் பயிற்றப்பட்டுள்ளனர்.

செயலமர்வுகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மற்றும் யுனிசெவ் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடனும் வவுனியாவிலும், மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை போன்ற கல்வி மாவட்டங்களில் சர்வோதய அமைப்பின் அனுசரணையுடனும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த செயலமர்வுகளின் போது முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான உடலபிவிருத்தி, அறிவாற்றல் விருத்தி, சமூகமான எழுச்சி விருத்தி போன்ற பயிற்சிகளிலும் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

# விளையாட்டுச் செய்திகள்

நவாலி முருகானந்தா ச.ச. நிலையம், அதன் பொன் விழாவையும் புதிய கட்டடத் திறப்பு விழாவையும் முன்னிட்டு கரபந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டிகளை நடத்தவுள்ளது.

இதில் கரபந்தாட்டம், நாடகப் போட்டி என்பன யாழ்.மாவட்ட ரீதியிலும், வலைப்பந்தாட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலும் நடைபெறும்.

இதில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் நிலையச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

☆ ☆ ☆

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் 7 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

வி.சேந்தினி (தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு) உயரம்பாய்தல் மற்றும் 100 மீற்றர் தடை தாண்டல் போன்றனவற்றிலும், சி.ரஞ்சித்குமார் (தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு) நீளம் பாய்தல் மற்றும் கோலூன்றிப் பாய்தலிலும், க.மிதிலா (நல்லூர் பிரதேச செயலர் பிரிவு) நீளம் பாய்தல் மற்றும் 400 மீற்றர் ஓட்டம் போன்றவற்றிலும், 4x400 அஞ்சல் ஓட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு வீரர்களும் சாதனை நிகழ்த்தினர்.

சாதனை நிகழ்த்தியோர் அனைவரும் யாழ்.மாவட்ட தலைமையக விளையாட்டு அலுவலர் செ.ரமணனிடம் பயிற்சிபெற்று வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (13-86-ரி)

☆ ☆ ☆

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்ககிழமை 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

'மானிப்பாய் ஆனந்தா வி.க.எதிர் யாழ்.பல்கலைக்கழக வி.க.

(ஒ-86-ரி)

☆ ☆ ☆

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டச சுற்றுப்போட்டிகளில் யாழ் மாவட்ட அணி 'சம்பியன்' பட்டம் வென்றது.

கடந்த 8-9ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 52:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. இவ் வெற்றியின் மூலம் தொடர்ந்து மூன்று வருடங்கள் யாழ். அணி வென்று 'ஹட்றிக்' சாதனை படைத்துள்ளது. (ஒ-ரி)

## துன்னாலையில் கசிப்பு காய்ச்சிய பெண் கைது!

தென்மராட்சி, ஜுன்18

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பெண் திடீர் பரிசோதனையில் பொலீஸாரிடம் அகப்பட்ட சம்பவம் நேற்று துன்னாலை குடவத்தையில் இடம்பெற்றது.

திடீர் சோதனையில் ஈடுபட்ட நெல்லியடிப் பொலஸார் பெண்ணைக் கைது செய்ததுடன் கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும் கசிப்பினையும் பறிமுதல் செய்தனர்.

இப் பெண் ஏற்கனவே இரு தடவைகள் நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# அறமும் அறிவும் ஓங்க தம்மை அர்ப்பணித்த பண்டைத் தமிழ்ப் புலவரும் புரவலரும்

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் வெளியாகி வரும் தொடர் கட்டுரையின் மற்றொரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

'தாம் இன்புறுவது உலகு இன்
புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'
(குறள்)

**தாம்** இன்புறுதற்குக் காரணமான தம் கல்வியைக் கண்டு உலகமே இன்புறுவதால், கற்றறிந்தவர்



மேலும் மேலும் அக்கல்வியைக் கற்றலை விரும்புவர். இது கல்விச் செல்வத்திற்கு மட்டுமன்றிப் பொருள் செல்வத்திற்கும் பொருத்தமாகும். இவ்வாறான பொருட்செல்வரே புரவலர் எனப் போற்றப்படும் தகுதியுடையவராவர். புலமை என்பது ஆழ்ந்த எண்ணங்களின் முதிர்வேயாகும். எண்ணங்கள் பெருகப் பெருகச் செயல்கள் குறையும். சிந்தனை செய்வதற்கே காலம் போதாதென்று புலவர்கள் ஏங்குவர். பண்டைக் காலத்தில் புலவர்கள் பலர் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். மதுரைக் கொல்லன் புல்லனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் போன்றோரை உதாரணமாகக் கூறலாம். இவர்களும் புலமை அறிவு பெருகப் பெருகத் தொழிலை விடவேண்டி ஏற்பட்டது. தொழிலும், அது சார்ந்த கடமைகளும் சிந்தனைகளைத் தடுக்கும்போது அவை புலமைக்கு ஊறு செய்யுமெனக் கண்டால் - புலமை இன்பத்தை விரும்பித் தொழிலைக் கைவிடவே செய்வர். இவர்களாலேயே கலைகளும் பண்பாடுகளும் வளரும். இத்தகையோரை இனங்கண்டு அவர்களை ஊக்குவித்தும், பொருள்தந்து காப்பாற்றியும் வாழ்வித்த புரவலர்களும், அரசர்களும் வள்ளல்களும் பண்டைத் தமிழகத்தில் இருந்தனர்.

'வண்மை இல்லை ஓர் வறுமையின்மையால்" 'கொள்வார் இலாமையின் கொடுப்பாரும் இல்லை மாதோ' என்ற நன்நிலையில் தமிழகம் அன்று இருந்தது.

பழந்தமிழ்நாடு புலவர்களின் வறுமையைக் கண்டநாடு எனினும் புரவலரின், வள்ளல்களின் வண்மையையும் கொடையையும் கண்டு செழித்திருந்தது. 'புலவர் பாடாது என் நாட்டைவிட்டு நீங்குவதே வறுமை' என்று உணர்ந்த வள்ளல் பெருமக்களும் அரசர்களும் இருக்கவே செய்தனர். இயற்கைச் செல்வம் எல்லார்க்கும் பொது எனினும், செல்வத்தைச் சேமித்து வறுமையை வளர்த்தலே உலக இயல்பாக, வல்லாரால் தற்காலத்தில் மாற்றப்பட்டு விட்டது. பண்டைத் தமிழகம் இதற்குப் புறநடையாக இருந்தது. 'செல்வத்தின் பயனே ஈதல்' (புறம்) என்று பெரும் புலவர் நக்கீரர் அறிவுறுத்தினார். நக்கீரர் வழிவந்த பெருஞ்சித்திரனார் குமணனிடம் பெரும் பரிசில்களைப் பெற்றபோதும் வறுமை அவரை விட்டு நீங்கவில்லை. பொருளைக் கொண்டுவந்து அவர் மனைவியிடம் கொடுத்து விட்டு மனைவியை நோக்கி 'உன்னை விரும்புவோர்க்குக் கொடு, நீ விரும்புவோர்க்குக் கொடு, உன் சுற்றத் தார்க்குக் கொடு; நம் பசி தீரப் பல நாள் பொருள் தந்தார்க்கும் கொடு, இன்னார்க்கு என்று வரையறை செய்யாமற்கொடு, என்



னைக் கேளாமற்கொடு, நானும் கொடுப்பேன் நீயும் கொடுப்பாயாக. எல்லார்க்கும் கொடு, வல்லவாறு திறம்பட வாழ்தலைப் பற்றி எண்ணாதே' என்று கூறினார். இறுதியில் இப்பொருள் எல்லாம் 'வள்ளல் குமணன் நல்கிய வளம்' என்றார். இத்தகை புலவர்க்கு எத்துணைச் செல்வம் நல்கினும் வறுமை நீங்காதே. எனவே 'ஈத்துவக்கும் இன்பத்தை' அவர்கள் தொடர்ந்து பெறுவற்கு, வறுமை அவர் வாழ்வில் தலைகாட்டாமல் கொடுத்துக்கொண்டே இருத்தல் வேண்டும். இதனைப் பண்டைத் தமிழகம் செய்தது. சுற்றிலும் உள்ளவர் வயிறு காய, தம் வயிறு மட்டும் குளிரும் நிலையைத் தமிழ்ப் புலவர் விரும்பவில்லை. 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டனர்'.

அறிவும் அதன் முதிர்வும், அதனால் காமுறுவதும் புலவர் தொழிலாகும். உண்டுண்டு உறங்கி வயிற்று வாழ்வு வாழ்வோர் கலை என்றோ, கடவுள் என்றோ எண்ணவும் மாட்டார். அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை, நினைப்பும் இல்லை. வயிற்றுக் கவலையுள்ள மக்களின் தொகை இக் காலத்தில் அதிகரிக்கிறது. அதனால் அறிவுக்கலை மக்களிடம் வளர வாய்ப்பில்லை. நாளை வயிற்றிற்கு என் செய்வோம் என்ற கவலையே ஒருவன் மனதை மாற்றி அளவின்றிப் பொருளைத் தேடச் செய்கின்றது. அதுவே பிறர்க்கும் ஈயாது சேர்க்கும் வன்மையையும் தருகின்றது.

புலவர் பெருமக்கள் அறிவுச் செல்வராவர். இவர்கள் அறிவை எல்லா வகையிலும் கொடுக்கச் சித்தமாக உள்ளனர். ஆனால், அதனைப் பெற விரும்புவோர் குறைவாக உள்ளனர். காரணம் வயிற்றுக் கவலையே ஆகும். இக்கவலை உள்ளவரையில் அறிவாளரின் கொடையும், அறவோரின் கொடையும் தேங்கியே கிடக்கும். இந்த அறிவுக்கொடை கொடுப்போரை நாடிச்சென்று அச்செல்வத்தைப் பெறாத மக்கள் பலராக இருப்பதாலேயே உலகத்தில் கொலையும், கொள்ளையும், போரும், பூசலும் தாண்டவமாடுகின்றன. வயிற்றுக் கவலையைக் கொன்றொழிக்கப் பழந்தமிழகத்தில் உணர்வுமிக்கப் புலவரும், புரவலரும் முயன்றுள்ளனர்.

சோழன் குலமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் தன்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கொடையாளியான பசிப்பிணி மருத்துவன் - பண்ணன் என்பவனைக் காணச் சென்றான். இப்பண்ணன் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்று அழகிய தொடரால் கொற்றங் குன்றனார் என்ற புலவரால் பாராட்டப்பட்டவனாவான். அவனது சிறுகுடிக்குச் சோழன் சென்றபோது கண்டகாட்சி உள்ளத்தை உருக்கியது. பண்ணனது வீட்டிற்கு நெடுந்தொலைவில் சென்றபோதே, பழம்மிக்க மரத்தில் பலவகைப் பறவைகள் இருந்து ஒலித்தாற் போன்று, பண்ணன வீட்டிற் சென்று உணவு பெறுவோர் செய்யும் ஆரவார ஒலி கேட்டது. சிறுவர் பலர் சோற்றுத் திரளைக் கையில் ஏந்தி நிரல் நிரலாகச் செல்லும் காட்சியைக் கண்டான். மழை வருமென அஞ்சிச் சிற்றெறும்புகள் முட்டைகளை எடுத்துக்கொண்டு மேட்டு நிலம் நாடிச் செல்லும் ஒழுங்கு போல் அச்சிறுவர் வரிசை வந்து கொண்டே இருந்ததைக கண்டான். பசிப் பிணியால் வாடும் மக்களின் நிலை அவனது உள்ளத்தைக் கசியச் செய்தது.

பசிப்பிணி மருத்துவமனையை நினைந்து வாழ்த்தினான். வெண் குடைக்கீழ் உலகாளும் வேந்தனாகிய தன்னைவிட அவ்வள்ளல் உதவி மிக்கவனாக நாட்டைக் காப்பாற்றுவதை உணர்ந்தான். தான் வாழ்வதைவிடப் பண்ணன் வாழ்வது நன்மையே என்று எண்ணினான். பண்ணன் அக் காலத்தில் முதுமையுடையவனாய் இருத்தலை நினைந்த சோழன், அவனது வாழ்நாள் நீளவேண்டுமே என்று விரும்பினான். தன் வாழ்நாளில் எஞ்சிய பகுதி எல்லாம் பண்ணனே பெற்று நெடிது வாழ்ந்து நாட்டிற்கு நலம் செய்ய வேண்டுமென வாழ்த்தினான்.

**நாக.சண்முகநாதபிள்ளை**

பசிப்பிணியால் வாடும் மக்களின் துன்பத்தைப் போக்க ஒருவன் உழைப்பானாயின், அவனை வாழ்த்தி, அவன் நெடுங்காலம் வாழுமாறு விரும்பும் நெஞ்சம், பெருநிலத்தை ஆண்ட வேந்தனுக்கு இருந்தது. இது அக்காலத்து நல்லுணர்வின் விழுப்பத்தை விளக்குகின்றது. அன்றோ இவ்வாறே நல்லுருத்திரன் என்ற சோழனும் தன்வாழ்நாளை அர்ப்பணித்தான். உலகத்திற்குத் தீங்கு விளைவிப்பவரின நட்பை இவன் வெறுத்தான். கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற அரசன் உலகத்தை வாழவைக்க விரும்பினோரை வாழ்த்திப் பாடினான். பண்டைத் தமிழகம் மாண்புடைய சான்றோரை இவ்வாறு போற்றிப் புகழ்ந்து அவர்கள் தொண்டினை ஏற்றம் பெறச்செய்தது.

தற்காலத்தில் தனிமனிதனின் தொண்டுள்ளத்தைவிட அமைப்புகளின் ஆற்றல், வலுவுடையதாயுள்ளது. எனவே, அவ்வாறான சேவைக் கழகங்களையும் நல்லமைப்புக்களையும் ஆதரித்து வந்தால் பசிப்பிணி அகலவும் அறிவுக் கவலை ஏற்படவும் வாய்ப்புண்டாகும். மக்கட் பண்பு இதனால் மாண்புறுமன்றோ.

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களில் தேடிச் சுவைக்கும் திறன் அருகிவரும் தற்காலக் கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டலை இவை கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

---

# ஈழத்தமிழர்களது வளங்கள் அந்நியருக்கு தாரைவார்ப்பு!

**போ**ரனர்த்தம், பொருளாதாரச் சீர்குலைவு எனத் தாங்கமுடியாத பல்வேறு சுமைகளைத் தாங்கிய தமிழினம், இப்போது ஏற்பட்டுள்ள தற்காலிக சமாதானச் சூழ்நிலையால் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது. இருந்தும் நிரநதர சமாதானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. இந்நிலையில்தான் பாரிய ஆபத்தொன்று தமிழினத்தை வளைகக இருப்பதாக அச்சம் எழுந்துள்ளது. சர்வதேச வல்லரசுகளின் பார்வை

**தாம் விரும்பிய தீர்வை தமிழர் மீது திணிக்க அரசு முன்னேற்பாடா?**

இலங்கை பக்கம் திரும்பியிருப்பதே அந்த ஆபத்தாகும். இலங்கையரசும் வல்லரசு நாடுகளைத் தம்பக்கம் இழுத்துத் தமிழர்மீது பலாத்கார அழுத்தங்களை பிரயோகிக்கத் திட்டமிட்டுச் செயலாற்ற முனைவதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன: ஈழத்தமிழரின் மரபுவழித்தாயக வளங்களைச் சுரண்ட அதற்காக வல்லரசுகளுக்கு இடமளிக்கப்படுகின்றதோ என்ற சந்தேகமும், எழுகிறது.

1990களின் ஆரம்பக்கட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பலாலி விமானத் தளத்தை அண்டிய பல சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவுள்ள நிலங்கள் பறிக்கப்பட்டுத் தமிழ் மக்கள் நிரந்தர அகதிகளாக்கப்பட்டனர். அண்மையில் இப்பகுதி மக்கள் போராட்டங்களையும் நடத்தியிருந்தனர். விமானத்தள விஸ்தரிப்புக்காக வலி.வடக்கு பிரதேச மக்களின் வீடு வாசல்கள், கோயில்கள் என்பன இடித்து நொறுக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டுக் கிடக்கின்றன.

செப்ரெம்பர் 11இல் நடந்த அமெரிக்க வர்த்தக மையத்தின் மீதான தாக்குதலால் பீதியடைந்த அமெரிக்கா தனது நேச நாடுகளுடன் கூட்டுச்சேர்ந்து தன்னைத் தானே சர்வதேச பொலீஸ்காரனாக்கி உலகப் பயங்கரவாதத்தைச் சாட்டாக வைத்து உலக நாடுகள் எங்கும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. அதன் ஓர் அங்கமாகவே ஆசிய நாடுகளைக் கட்டுப்படுத்திக் கண்காணிக்கும் நோக்குடனும், தமிழரின் உரிமைக்கான போராட்டத்திற்கு பயங்கரவாதப் பட்டத்தைச் சூட்டி நசுக்குவதற்கும் இலங்கை அரசாங்கத்துடன் கைகோத்து இலங்கையில் தனது இராணுவத் தளத்தை அமைக்க முனைந்து கொண்டிருக்கிறது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானதாகவும் தெரியவருகிறது.

இதனை அமெரிக்கா மறுத்திருந்த போதும் வான் வெளி எதேச்சதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு உபகாரமாக இலங்கை அரசுக்கு இராணுவ தளபாட உதவிகள், இலங்கை இராணுவத்திற்கு போர்ப் பயிற்சி மற்றும் யுத்தம் புரிவதற்கான உத்திகளைக் கற்றுக்கொடுத்தல் போன்றவற்றை வழங்குவதற்கு அமெரிக்கா முனைந்துள்ளது. இதன் ஓர் அங்கமாகவே அமெரிக்காவின் நாசகாரிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு அடிக்கடி வந்துபோயின. இது மேற்கூறிய விடயங்களை உறுதிப்படுத்துவதாகவே அமைகின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யாழ். விஜயத்தின்போது அமெரிக்கா ஜெற் விமானம் பலாலி விமானத் தளத்தில் தரையிறக்கப்பட்ட நிகழ்வு போருக்கான ஓர் ஒத்திகையாகவே தமிழர்கள் மத்தியில் கருதப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ரணில் - கிறிஸ்ரினா றொக்கா இரகசியப் பேச்சும் தமிழர் மத்தியில் அச்சமூட்டும் செயலாகவே அமைந்தது.

இவ்வேளையில், அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் முறையற்ற விதத்தில் எல்லைமீறி தமிழீழ விடுதலைப் புலிகளை எச்சரிக்கை செய்வதும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டியதே. அமெரிக்க வல்லரசு ஆனது தமிழரின் மரபு வழித் தாயகப் புலத்தில் இராணுவத்தளம் அமைப்பதற்கு முனைந்து கொண்டிருக்கிறது. இதற்காக வான் பரப்பையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

இதுவரை நேரமும் கண்மூடிக் கொண்டிருந்த இந்தியா இப்போது தான் சுதாகரித்துள்ளது. அமெரிக்காவின் நடவடிக்கைகள் தனது பிராந்திய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்து விடலாம் என்ற காரணத்தால் பிந்தி விழுந்தாலும் முந்தி எழுவதுபோல திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை தனது பாவனைக்காக வாடகைக்கு அமர்த்தியுள்ளது. இந்த நேரத்தில் இந்தியா அமெரிக்காவைப் பகைக்க விரும்பவில்லை. காரணம் காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தானுடன் ஏற்பட்டுள்ள பதற்றத்துக்கு பயங்கரவாதத்தை சாட்டாக வைத்து அமெரிக்காவின் ஆதரவைத் தன்பக்கம் இழுக்க இந்தியா முயற்சிக்கிறது. ஆனால் இலங்கைத் தமிழர் விடயத்தில் கபட நோக்கோடு தான் தூரவிலகி நிற்பதாகக் காட்டிக்கொள்கிறது இந்தியா.

இந்த நிலையில்தான் சீனாவும் தன் பங்குக்கு மூக்கை நுழைக்கி

**எம்.சுதேசிகன்**

றது. வடக்கு - கிழக்குப் பகுதிக் கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுவதற்கும் வட-கிழக்கில் உல்லாச விடுதிகள் அமைப்பதற்கும் இலங்கை அரசுடன் இணக்கம் கண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்படித் தமிழ் இனத்தின் நில புல கடல் வளங்கள் படிப்படியாக அந்நியர்களால் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் பின்புலம் என்ன? இலங்கை அரசானது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களையும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அச்சுறுத்தி அடிபணிய வைப்பதற்காகவும் மீண்டும் யுத்தம் ஒன்று வெடிக்குமானால் இத்தகைய பகுதிகளை புலிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்குமாகவே சர்வதேச வல்லரசுகளை வரிசை வரிசையாக இழுத்து தென் பகுதிகளைத் தவிர்த்து வடக்கு - கிழக்குப் பகுதிகளான தமிழனின் மரபுவழித் தாயகத்தில் உள்ள வளங்களை சன்மானமாக வழங்கி வருகிறது.

அமெரிக்காவிற்கு இராணுவத் தளம்!

இந்தியாவுக்கு எண்ணெய்க் குதம்!!

சீனாவுக்கு மீன்!!!

அப்போ ஈழத்தமிழனுக்கு?

☆

---

# கல்வியியற் கல்லூரியில் புதிய கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அடுத்த கல்வியாண்டின் போது, இருபுதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

முதல் மொழி (தமிழ்), நாடகமும் அரங்கியலும் ஆகிய இரு பாடநெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், நூலக விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், ஆங்கிலம், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய 8பாட நெறிகளே நடைபெற்று வருகின்றன.

(ஒ-180)

# யாழ்.முஸ்லிம்களின் விவரம் சேகரிப்பு

கொக்குவில்,ஜூன்18

யாழ். மாவட்டத்தில் வசித்த முஸ்லிம் மக்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக அவ்வப்பகுதிகளில் வசித்த முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை, அந்தக் குடும்பங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் முஸ்லிம் சமய சம்பந்தமான விவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்து அனுப்புமாறு யாழ். அரச அதிபர் பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.

(ஒ-13-ரி)

### கடத்தல், கொள்ளை, வல்லுறவு

# இனக்குழுக்களின் அட்டகாசத்தால் ஆப்கான் உதவி அமைப்புகள் மிரட்சி!

## நாட்டைவிட்டு வெளியேறுவதாக எச்சரிக்கை

காபூல்,ஜூன்18

வடக்கு ஆப்கானிஸ்தானில் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமது பணியாளர்கள் மீது ஆயுதம் தாங்கிய ஆப்கான் இனக்குழுக்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதால், அப்பகுதியில் தமது பணிகளை நிறுத்திவிடப்போவதாக சர்வதேச தொண்டு நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

ஆப்கானின் செல்வாக்குமிக்க அமைப்பான - பழங்குடித்தலைவர்கள் அங்கம் வகிக்கும் 'லோயா ஜிர்கா' நாட்டின் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான அரசைத் தெரிவு செய்யக் கூடியுள்ள வேளையில் இந்த எச்சரிக்கை வெளிவந்துள்ளது. ஏற்கனவே இனக்குழுக்களிடையேயான கருத்து வேறுபாடுகளால் 'லோயா ஜிர்கா' வின் கூட்டம் திணறிவரும் சமயத்தில் இனக்குழுக்களின் செயற்பாடுகள் குறித்த இந்த எச்சரிக்கை மேலும் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஐ.நா.பணியாளர் உட்பட பல பெண்கள் ஆயுதம் தாங்கிய குழுக்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதாகவும் -

உதவிப் பொருள்களை கடத்துதல், பணியாளர்களைத் தாக்குதல் போன்றவற்றில் இனக்குழுக்கள் ஈடுபடுவதாகவும் -

ஆப்கானில் உள்ள ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே அமெரிக்க உதவி நிறுவனம் ஒன்று தனது பணிகளை இடைநிறுத்திவிட்டு வடக்கு ஆப்கானில் இருந்து வெளியேறியுள்ளது.

இனக்குழுக்களிடையேயான மோதல் ஒன்றில் பாதிப்படைந்த மற்றோர் உதவி நிறுவனம் ஆப்கானை விட்டு வெளியேற ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவ நடவடிக்கையையடுத்து, தலிபான்களின் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், அதுவரை காலமும் அடங்கியிருந்த பழங்குடி இனங்களின் ஆயுதப் படையினர் எதிர்த் தரப்பினரை தாக்குதல், கொள்ளையடித்தல், கும்பலாக பாலியல் பலாத்காரங்களில் ஈடுபடுதல் என பல்வேறு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தற்போது பழங்குடி இனத் தலைவர்கள் அங்கம் வகிக்கும் அரசே பதவியில் இருத்தப்பட்டுள்ளதால், எந்த இனக் குழுவையும் கட்டுப்படுத்த முடியாது அரசின் தலைவர் ஹமீட் ஹர்சாய் திணறிவருவதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய நிலையில் பழங்குடி இனத்தவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும், அது திருப்திகரமாக நிறைவேற்றப்படவில்லை என்றே ஐ.நா. அதிகாரிகள் கருதுகின்றனர். பெரும்பாலான பழங்குடி இனத்தளபதிகள் தத்தமது மேலாண்மையைக் காக்கும் நோக்கில் ஆயுத ஒப்படைப்புக்கு ஒத்துழைக்கவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ)

## பாகிஸ்தான் குண்டு வெடிப்புக்கு அல்கெய்டா அமைப்பே காரணமாம்

வாஷிங்ரன்,ஜூன்18

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலுக்கு அல் கெய்டா தீவிரவாத அமைப்பே பொறுப்பு என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலை 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை பாகிஸ்தான் பொலீஸாருடன் சேர்ந்து அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவும் (எவ்.பி.ஐ.) நடத்தி வருகிறது.

பின்லேடன் உயிருடன் இருக்கிறார். பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் குண்டு வைத்துத் தகர்க்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார் என்று கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் தெரிவித்துள்ளதாக 'வாஷிங்ரன் போஸ்ட்' மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால் 'அல்ஹனுான்' என்ற அதிகம் அறியப்படாத ஓர் அமைப்பு முன்னதாக இந்தக் குண்டுவெடிப்புக்கு உரிமை கோரியிருந்தது.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கும் வெளிநாட்டு உளவு அமைப்புகளுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கக்கூடும் என்ற கோணத்திலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)





முதன் முறையாக

License No : 50445

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்:
செனற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### தருண அருண கொழும்பு நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளுதல்

தருண அருண (கொழும்பு) நிறுவனமானது கடந்தகாலங்களைப் போலல்லாது தற்போது தினந்தோறும் தனது திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறிக்கான பதிவுகளை மேற்கொண்டு வருகிறது. எனவே, தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டு தருண அருண (கொழும்பு) நிறுவனத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளாத யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தருண அருணவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். இதற்கான சுயவிவரப்படிவம் விண்ணப்பப் படிவம் இவற்றை தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள கீழ்க்காணும் படிவங்களையும் அத்துடன் உங்கள் சுயவிலாசமிடப்பட்ட கடித உறை ரத்துச் செய்யப்படாத ரூபா 4.50 பெறுமதியுள்ள முத்திரையையும் இணைதது அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

அனுப்பிவைக்கவேண்டிய படிவங்கள்:

1. சுயவிவரப்படிவம்
2. விண்ணப்பப்படிவம்
3. பட்டச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நகல்.

இவை சம்பந்தமான மேலதிக விவரங்களை தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/22562)


## ஸ்பெயின் நாடு சுதந்திரமடைந்த வெள்ளி விழா

மாட்ரிட்,ஜூன்18

ஸ்பெயின் நாட்டில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் சென்றதை அடுத்து அங்கு ஜனநாயகத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்படுகின்றது.

1977ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி ஸ்பெயின் சர்வாதிகாரி பிரான்ஸிஸ்கோ பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. (ம)

## மடகாஸ்கர் அரசு கலைப்பு

லண்டன்,ஜூன்18

மடகாஸ்கர் அதிபர் மார்க் ரிவலோமனான அரசாங்கத்தைக் கலைத்துள்ளார். இதன் மூலம் அவருக்கும் முன்னாள் பிரதமர் ரட்ஸிரிக்காவுக்கும் இடையில் இடம்பெற்றுவந்த நீண்ட நாள் அதிகாரப் போர் முடிவுக்கு வநதுள்ளது.

உடனடியாகவே புதிய பிரதமராக ஜக்குஸ் சைலாவை அதிபர் நியமித்துள்ளார். அவர் மிக விரைவில் புதிய அமைச்சரவையை நியமிப்பார். (ம)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் உயிரிழப்பு!

## காஷ்மீர் மாநிலத்தில் சம்பவம்

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 5 இந்துக்கள் கொல்லப்பட்டனர்.

மாநிலத் தலைநகர் ஜம்முவில் இருந்து 60 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள உதம்பூர் மாவட்டம், பல்மாகோட் என்ற கிராமத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தீவிரவாதிகள் கிராத்தில் இருந்த இந்துக்களின் வீடுகளுக்குள் புகுந்து கண்டபடி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். இதில் 5பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். வேறு மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான பதற்றம் தணிய ஆரம்பித்த ஒருவார காலத்தில் நடந்துள்ள முதலாவது வன்முறை சம்பவம் இதுவாகும்.

மாநிலத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது இடையில் சிக்கி இரு பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்த மோதலில் தாம் மூன்று தீவிரவாதிகளைக் கொன்றதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது. (ம)

# வனப் பகுதிக்கு தீ வைத்தவர் அமெரிக்காவில் கைது!

நியூயோர்க்,ஜூன்18

அமெரிக்காவின் காட்டுப் பகுதிக்குத் தீவைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வனத்துறையைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொழில் நுட்பவியலாளரான ரெறி பார்மொன் (வயது 38) என்ற ஊழியரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த ஒரு வார காலமாக கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள மலையடிவார தேசிய வனப்பகுதியில் காட்டுத் தீ பற்றி வெகுவேகமாகப் பரவி வருகின்றது.

இந்தக் காட்டுத் தீ காரணமாக சுமார் 40 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப் பரப்பளவுள்ள காடு எரிந்து சாம்பரானது. காட்டுத் தீ சுமார் 200 அடி உயரம் வரை கொளுந்துவிட்டு எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காட்டுத் தீயை ஏற்படுத்தி அரச சொத்தை சேதமாக்கக் காரணமாக இருந்ததுடன் இது குறித்து விசாரணை செய்த அதிகாரிகளுக்குப் பொய்யான தகவல்களை வழங்கினார் என்றும் பார்டன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் இவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 2 லட்சதது 50 ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்கப்படலாம். (ம)


## வேதனம் வழங்கல்

### பரந்தன் இரசாயன கம்பனி லிமிட்டெட்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் கோண்டாவிலில் வைத்து 18.06.2002 (செவ்வாய்) தொடக்கம் 21.06.2002 (வெள்ளி) வரை வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்
தொழில் முகாமையாளர்

(4954)



## மாபெரும் சலுகை விற்பனை (2002)

காலம் : 14.06.2002 தொடக்கம் - 18.06.2002 வரை.
(ஞாயிறு 10.00மணி தொடக்கம் 2.00 மணிவரை)

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

இடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(4823)


## ஆத்மசாந்திப்பிரார்த்தனை அழைப்பும் நன்றிநவிலலும்

குவலயத்தில்
15
01
1932



குகமயத்தில்
25
05
2002

ஸ்ரீமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி அவர்கள்

எமது குடும்பத்தலைவி திருமதி. தையல்நாயகி விநாயகமூர்த்தி அவர்கள் 25.05.2002 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்தவர்களிற்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர்கள், மற்றும் 27.05.2002 அன்று கொழும்பில் நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை 24.06.2002 அன்று 11மணி அளவில் கொழும்பு பம்பலப்பிட்டி லொறான்ஸ் வீதி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனை தயவு செய்து ஒரு தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

270/ 4,திம்பிரிகஸ்யாய வீதி
கொழும்பு-05

இங்ஙனம்
கணவர் அ. விநாயகமூர்த்தியும்
(பாராளுமன்ற உறுப்பினர்)
குடும்பத்தினரும்

# மக்கள் வங்கியின் சேவைகள் யாழ்.குடாநாட்டில் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்18

யாழ்.குடாநாட்டில் மக்கள் வங்கியின் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது. பல புதிய திட்டங்களுடன் மக்கள் வங்கியின் இயக்குநர் சபைத் தலைவர் லால் நாணயக்கார மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் டபிள்யூ.ஜே. மாட்டின் பெர்னாண்டோ போன்றோர் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மக்கள் வங்கியின் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் இவர்கள் நாளை புதன்கிழமை சில செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவர்.

நெல்லியடியில் இயங்கிவரும் பருத்தித்துறை வங்கிக் கிளையினை நாளை முதல் நெல்லியடிக் கிளையாக இயக்குநர் சபைத் தலைவர் தரமுயர்த்தி வைப்பார்.

அத்துடன் பருத்தித்துறை நீடித்த கருமபீடத்தை முழுமையான கிளையாக பருத்தித்துறையில் அவர் ஆரம்பித்தும் வைப்பார்.

உரும்பிராயில் நீடித்த கருமபீடமொன்றையும் ஆரம்பித்து வைப்பார்.

மக்கள் வங்கியின் 108ஆவது கிளையினை சங்கானையில் திறந்து வைக்கும் நிகழ்வையும் மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வங்கிக் கிளையின் தன்னியக்க பணம் கொடுக்கும் இயந்திரத்தைச் செயற்படுத்தும் பணியும் நாளைய தினம் ஆரம்பித்து வைக்கப்படும்.

நாளை மறுதினம் கொழும்பு திரும்பும் அதிகாரிகள் குழுவினர் வழியில் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையினை மீண்டும் திறந்து வைப்பதுடன் சாவகச்சேரி கிளை வாடிக்கையாளரான எஸ்.கிருஷ்ணபிள்ளைக்கு ஜய ஸ்ரீ 2 சேமிப்புத் திட்டத்தில் கிடைத்த இரு சக்கர உழவு இயந்திரத்தை கையளிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-13)



லால் நாணயக்கார

# கால்நடை பராமரிப்பு குறித்த கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

கால்நடை பராமரிப்பு தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 24ஆம் திகதிய வர்த்தமானியின் பிரகாரம் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்த -

அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதாவது 2 பாடங்கள் உட்பட 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்த -

இம்மாதம் 30ஆம் திகதி அன்று 17 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து இக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு தத்தம் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை "பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திப் பிரிவு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த.பெ.இல.-13, சிற்றபே, பேராதனை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-180)

### 84ஆம் ஆண்டு காலப்பகுதியில் வைத்த

# அடகு நகைகளை மீளப்பெற இலகுவான விதிகள் நடைமுறை

## மக்கள் வங்கிக் கிளைகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்18

1984ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டு, இன்றுவரை மீட்கப்படாத நகைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

அடகு வைத்துப் பெறப்பட்ட தொகையுடன், அதே தொகைக்கு சமனான வட்டித் தொகையினை மட்டும் சேர்த்துச் செலுத்துவதன் மூலம் அடகு நகைகளை மீளப் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் -

அடகு வைத்தவர்கள் வெளிநாடுகளில் வதியும் சந்தர்ப்பத்தில் தமது பிரதிநிதிகளை வங்கியிடம் உறுதிப்படுத்துவதன் மூலம் நகைகளை பெற்றுக் கொள்ளலாம் என்றும் வங்கி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த ஒழுங்குகள் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ-13)

## இரு விபத்துக்களில் இருவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்18

இரு இடங்களில் நேற்று இடம் பெற்ற விபத்துச் சம்பவங்களில் காயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய்ப் பகுதியில் மாட்டு வண்டிலும் ஆட்டோவும் மோதிக் கொண்டதில் ஆட்டோ சாரதியான பி.றெஜீவன் (வயது 23) என்பவர் முகத்தில் காயமடைந்தார்.

யாழ்.நகரப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிளுடன் மோதி நந்தன் (வயது 24) என்பவர் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் யாழ்.வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ஒ-ரி)

### கடந்த அரசின் நடவடிக்கையாலேயே

# கடும் பொருளாதாரச் சிக்கலை நாடு எதிர்கொள்ள நேரிட்டது

## பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

சுதந்திரத்தின் பின்னர் இதுவரை காலமும் எதிர்நோக்கியிராத பெரும் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை தற்போது முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த அரசு நாட்டின் கடன்சுமைகள் தொடர்பாக மக்களுக்கு எதுவுமே வெளிப்படுத்தாமல் செயற்பட்டு வந்ததால் தற்போது சந்திக்க நேர்ந்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடி நாட்டு மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானமாக 278 பில்லியன் ரூபா கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த ஆட்சியாளர்களால் பெறப்பட்டுள்ள கடன் தொகைகளை இந்த வருட இறுதிக்குள் செலுத்தவேண்டிய நிலை தற்போதைய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

பெறப்பட்ட கடன் மற்றும் வட்டி உட்பட இந்த வருட இறுதிக்குள் 327 பில்லியன் ரூபாவை தற்போதைய அரசு செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பாக எந்தக் கடன் பதிவேடுகளிலும் பதியப்படாத கடன்களும் உள்ளன.

கடன் கொடுத்தவர்கள் வங்கிகளஊடாக கடன்தொகையைக் கேட்கும் போதுதான் அது தொடர்பாக எமது அரசுக்கு தகவல்கள் கிடைக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-6-9)

# தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் வாழ்வு வளம் பெறுமா?

தென்மராட்சியின் தெற்குப்பக்கமாக ஏ-9 கண்டி வீதியையும், அதனை அடுத்துவரும் புகையிரத வீதியையும் கடந்து சென்றால், அகன்று விரிந்த வயல் வெளிகளையும் கடல்நீர் ஏரிகளையும், குளங்களையும் பனை, தென்னை முதலிய வான் பயிர்களும அமையப்பெற்று, வெளிநாட்டு பறவைகளைக்கூட கொள்ளைகொள்ள வைக்கும் அழகிய பிரதேசம் தென்மராட்சி தெற்கு பிரதேசம்.

இப்பிரதேசம் நாவற்குழி கேரதீவு வீதியையும், சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியையும் கொண்டிருப்பதனால் வீதியை அண்டிய வீதிக்குடியிருப்பையும், அதனை அடுத்த விவசாயக் குடியிருப்பையும், அதனையடுத்து மீன்பிடிக் கரையோரக் குடியிருப்பையும் கொண்டு இங்குள்ள மக்கள் காலம் காலமாக பூர்வீகமாக வாழ்ந்து வந்தனர். இனப்பிரச்சினை காரணமாக சில காலங்களில் துன்பங்களை அனுபவித்த போதும் மிகவும் சந்தோசமாக தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

12-12-1999இல் ஏற்பட்ட எதிர்பாராத பிரச்சினையால் மக்கள் யாவரும் திடீரென இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி நாவற்குழி, கோகிலாக்கண்டி, நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய சுமார் ஆயிரத்து 625 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து நாற்பது பேர் இடம் பெயர்ந்தனர். இதிலும் தனங்களப்பு வாழ் மக்கள் வீதி வழியாக இடம் பெயர எத்தனித்த வேளையில் தனங்களப்புச் சந்தியில் இருந்த இராணுவத்தினர் மக்கள் எவரையும் அப்பால் செல்ல அனுமதிக்கவில்லை.

இதனால் வேறு வழியில்லாமல் எறிகணை வீச்சு, துப்பாக்கிச் சூடு, விமானக் குண்டு வீச்சுக்கள் போன்ற தாக்குதல்களால் வயல்வெளிகள் குளங்கள், கடல்கள் இவற்றைத் தாண்டி கொடிய மழையின் மத்தியில உடுத்த உடுப்புடன் சாவகச்சேரி நோக்கிச் சென்றனர். ஏனைய கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் உடன் வெளியேறியதுடன், சிலர் தச்சன்தோப்பு, கோகிலாக்கண்டி, நாவற்குழிப் பகுதிகளில் ஒரு சில நாள்கள் தங்கினர். ஷெல் வீச்சுகள் மிகவும் மோசமடைய இங்குள்ள மக்களும் முற்றாக வெளியேறினர். இவ் இடப்பெயர்வின்போது 5பேர் வரையில் இறந்தும் 25பேர் வரையில காயமடைந்தும் இருந்தனர். இதனால இப்பிரதேச முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான மீன்பிடியும் விவசாயமும் முற்றாகப் பாதிப்படைந்தன.

### விவசாயப் பாதிப்புக்கள்

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை மிகப் பெரிய, வளமான வயல் நிலங்களாக மறவன்புலோ (623ஹெக்.), தனங்களப்பு (368ஹெக்.) பிரதேசங்கள காணப்படுகின்றன. இது தவிர இப்பிரதேசத்தில் கைதடி நாவற்குழி, கோகிலாக்கண்டி, நாவற்குழி பிரதேசங்களில் சிறு சிறு வயல் நிலங்களாக மொத்தம் 1500 ஹெக்டேயர் வயல்நிலங்கள் காணப்படுகின்றன. இதனால் வருடாவருடம் 600 மெற்றிக தொன்னிற்கும் மேற்பட்ட நெல் உற்பத்தி செய்யப்பட்டு யாழ். குடாநாட்டின் உணவுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்து வந்தது. இதனால் கூலியாள்களில் இருந்து முதலாளிமார் வரை குடாநாட்டில் பல்வேறு தரப்பினர் நன்மையடைந்தும் வந்தனர். ஆனால் கடந்த இரண்டரை வருடங்களாக எறிகணை வீச்சுக்களினாலும், குண்டு வீச்சுக்களினாலும், கனரக வாகனங்களின் போக்குவரத்தினாலும், காவலரண் மற்றும் பாதுகாப்பு அரண அமைப்பினாலும் இப்பிரதேச வயல் வெளி தனது இயற்கைப் பொலிவை இழந்து காணப்படுகின்றது. இன்று பல்வேறு அழிவுகளிற்கும் நட்டஈடு கொடுக்கப்பட்டு வரும் இவ்வேளையில 2000ஆம் ஆண்டு அறுவடைக்குத் தயாராக நின்ற நெல்விளை நிலங்களிற்கு பலமுறை நட்டஈடு கோரியும இதுவரை எந்தவித நட்டஈடும் விவசாயிகளிற்கு வழங்கப்படவில்லை இது விவசாயிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

### மீன்பிடிப் பாதிப்புகள்

யாழ்.குடாநாட்டில் இறால் என்றாலே தென்மராட்சி தெற்குப் பிரதேசமே ஞாபகத்திற்கு வரும். சுமுகமான காலங்களில் இப்பிரதேச மீனவர்கள் மரக்கலங்கள், கண்ணாடி நாரிழைப்படகின் உதவியுடன் மூன்றாம் பிட்டி, நாச்சிக்குடா, பள்ளிக்குடா, பூநகரி, கல்முனை, ஆனையிறவு வரை தொழில் செய்து வந்தனர். இதுதவிர குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் மீனவர்கள் இங்கு வாடியமைத்து மீன்பிடித்து வந்தனர். இங்கு பிடிக்கப்படும் கடலுணவுகளின் ஒரு பகுதியினை அன்ட்றீஸ் (ANOREZ) கொம்பனி கொள்வனவு செய்து வந்தது. ஒரு பகுதி உள்ளூர் நுகர்விற்குப் போக ஏனைய கடலுணவுகள் கொழும்புக்கு ஏற்றுமதியாகின. பின்னர் ஏற்பட்ட பொருளாதார தடை, கடல் வலயத்தடை, இராணுவக் கட்டுப்பாடு, ஊரடங்கு உத்தரவு போன்ற தடைகளால் இங்குள்ளவர்களை மாத்திரம் கரையில் இருந்து அரை கி.மீ.மாத்திரம் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதனால் இவர்களது வருமானம் பாதிப்படைய, பல்வேறு துறைகளில் பாதிப்பினையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியது. பின்னர் 12.12.1999 இல் ஏற்பட்ட திடீர் இடப்பெயர்வு காரணமாக தமது தொழில் உபகரணங்களை முற்று முழுதாக விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏறபட்டது. பின்னர் தொழில் உபகரணங்களை பலமுறை மீட்பதற்கு முயற்சி செய்த போதும் எதுவித பயனும் ஏற்படவில்லை. இதனால் கைதடி நாவற்குழியில் 128 குடும்பங்களைச் சேர்ந்த 141 தொழிலாளர்களும், மறவன்புலோவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 39 தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர். இதனால் அவர்களில் தங்கி வாழ்ந்த 902 குடும்ப அங்கத்தவர்கள் முற்றிலுமாகப் பாதிககப்பட்டனர்.

### ஏனைய பாதிப்புக்கள

தென்மராட்சியில் பிரச்சினையின் ஆரம்பமே இப்பிரதேசங்கள்தான். இதனால் கேரதீவில் இருந்து நாவற்குழிவரை உள்ள வீடுகள், பொது நிறுவனங்கள, கோயில்கள், பாடசாலைகள என்பன சேதமடைந்து 5000இற்கு மேற்பட்ட கால்நடைகள் காணாமற் போயும், பனை, தென்னை முதலிய பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டும் உள்ளன. அதிலும் தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளில் இவற்றின் பாதிப்பு மிகவும கூடுதலாகக் காணப்படுகின்றது.

**ந.விக்கினேஸ்வரன்**

இன்று தென்மராட்சியில் அரசினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் பல மில்லியன் நிதி 'மீளக் கட்டியெழுப்புதல்' என்ற பெயரில் வழங்கப்படுகின்றது. இந்நிலையில் தென்மராட்சி தெற்கு பிரதேசம் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. அப்படியாயின் இப்பிரதேசத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஏனைய பிரதேசங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு விடும். ஒரு பிரதேச அபிவிருத்தி என்பது தனிய நகர அபிவிருத்தியை மட்டும் கருத்திற் கொள்வதல்ல. பின்தங்கிய கிராமங்களையும் முன்னேற்றுவதிலேயே அபிவிருத்தி தங்கியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இப்பிரதேசம் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தி. அவர்களிற்குரிய நட்டஈட்டினை பெற்றுக் கொடுத்து கிராம அபிவிருத்தியினை ஏற்படுத்தவேண்டும் என இங்குள்ள மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

★

## மரத்தில் இருந்து தவறி விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

தென்னை மரத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

இருபாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொத்தன் சின்னத்துரை (வயது53) என்பவரே மரணமானவராவார்.

தவறிவிழுந்து படுகாயமடைந்த இவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் போது இடைவழியில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(எ-15-6)

## பொலீஸார் மீது குண்டுத் தாக்குதல்!

வாகனமொன்றை இடைமறித்து சோதனையிட முயன்ற பொலிஸார் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒருவர் மரணமானார்.

பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஆறுபேர் இத்தாக்குதலால் ஆபத்தான நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தகவலொன்றின் பேரில் கடந்த சனியன்று வாகனமொன்றை இடைமறித்து சோதனையிட முற்பட்ட படலகும்பர பொலிஸ் நிலையப் பொலீஸார் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின் வாகனத்தைச் செலுத்திவந்த சாரதியை பொலீஸார் கைதுசெய்தனர். (ஒ)

## சமூக முன்னேற்ற கருத்தரங்கு

கைதடி,ஜூன்18

கிராம ரீதியில் மக்களின் கல்வி, பொருளாதாரம், சகோதரத்துவம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கோடு மனித முன்னேற்ற நடு நிலையத்தினரால் அண்மையில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய முன்றிலிலே கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள்,யுவதிகள் கலந்து கொண்டனர். இனிவரும் காலங்களில் மாதந்தோறும் இத்தகைய கருத்தரங்கை நடத்த வேணடும் எனவும் மேற்படி இளைஞர், யுவதிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டது. (ம-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (4862)

பொம்மனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கனகராசா, ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (4932)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

6நாள் நிரம்பிய **Prima Broiler** குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் குஞ்சு கொள்வனவு செய்வோரிடம் மட்டும் திருப்பி இறைச்சிக் கோழிகள கொள்வனவு செய்வோம். எம்மிடம் புதிய மருந்துகளும் உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4945)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த வயீராபாம், புறொயிலர் இறைச்சிக்கோழி மற்றும் கல்பேட்ஸ், சொயன்சியாஸ், பிக்போல்ஸ் மற்றும் கோழிப்பாட்ஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: T. கரன், இல.150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4949)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மனி இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் (ஐம்பது நாள்கள் நிரம்பியவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.கரன், இல.59, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (4950)

## கல்வி

O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை பழைய இடைகால புதிய திட்டங்களுக்கமைய தொடர்ந்து கற்பிப்பதில் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10,கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, சுண்டிக்குளி. (4929)

## தவறிவிட்டது

சத்தியதாஸன் சுதர்ஷா என்பவரது தே. அ. அட்டை (797683590V), விசேட அடையாள அட்டை இரண்டும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள தயவு செய்து சத்யா சோதிடர், 3ஆம் கட்டை ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
T.P. 2753 (4924)

சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த கதிகாமநாதன் விமலேஸ்வரி என்பவரின தே.அ.அட்டை (இல.796813130ஏ), விசேட அடையாள அட்டை என்பன 25-05-2002இல் பஸ்ஸில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். (4948)

## மணமகன் தேவை

3ஆம் வருட கொம்பியூட்டர் விஞ்ஞானம் சித்தியடைந்த U.K. மணமகனுக்கு ஆங்கில அறிவுள்ள மணப்பெண் தேவை. 25 வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். பொய்யாமொழி ஜோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம். (4926)

## தேவை

ஊதுபத்தி தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.
**ந.தியாகராசா**
**எரிபொருள் நிரப்பு நிலையம், ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி.**
(C/22561)

## யாழ் விவசாயப் பெருமக்கள் அனைவரையும் பிறவுண்ஸ் அன்புடன் அழைக்கிறது

யாழ். திருநெல்வேலியில் 2002 ஜூன் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாய சமூகத்தினர் அனைவரையும் அச்சந்தர்ப்பத்தில் அங்கு சமூகளிக்குமாறு பிறவுண் அன்ட் கொம்பனியின் விவசாய பணிக்குழு யாழ். விவசாயத்திணைக்களத்துடன் இணைந்து அன்புடன் வேண்டுகிறது.

பிறவுண் அன்ட் கொம்பனி லிமிடட்,
விவசாயப் பணிக்குழு,
இல. 75, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை,
கொழும்பு - 10.
தொலைபேசி 693097 - 695238
674172 - 674332 (சேவைப் பகுதி)

விவசாய உதவிப் பணிப்பாளர்
விவசாயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2175



## PX டி. வீ. அன்டெனா பூஸ்டர்



புதிதாக நிர்மாணிக்கப்பட்டது

மாதிரி ஏ-4000
உயர் சக்தி யூஎச் எப் வீஎச்எப் கலர் டீவீ பூஸ்டர்

- உயர் கேன் 35 db
- உயர் சக்தி 115 db- அதிக உற்பத்தியளவு
- சுப்பர் குறைந்த ஓசை - உயர் உணர்வூட்டியது
- உள்ளடங்கிய உள்நோக்கும் சிலெக்டா - யூஎச்எப் / வீ எச்எப்
- சுதந்திரமான உள்நோக்கும் அல்லது யூஎச்எப் / வீ எச் எப் கலந்து வெளிநோக்கும்

TV சென்டர்
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி : 434742
(C/22546)

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது

# மாணவர்கள் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஜூன்18

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அடங்கிய குழுவினர் அண்மையில் யாழ். ஆஸ பததிரியில் இரத்த வங்கியில் இரத்த தானம் செய்தனர்.

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தத்துக்கு நிலவும் பற்றாக்குறையை ஈடுசெய்யுமாறு இரத்த வங்கி மருத்துவர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து மேற்படி இரத்த தானம் வழங்கப்பட்டதாக கல்லூரி அதிபர் எஸ்.புண்ணியசீலன் அறிவித்துள்ளார். (எ)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் இரத்தினம் பாஸ்கரன்

மலர்வு 18-07-1961 உதிர்வு 20-05-2002

எமது அன்புத் தெய்வம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (19-06-2002) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கின்றது. எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*அண்ணாசிலையடி, கரணவாய்.* (4943) **மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## சின்னையா நடராசா *(சந்திரவளவு நடராசா)*

தச்சன்தோப்பு வீதி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா நடராசா (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும் குலக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சின்னாச்சி, தங்கம்மா, தங்கராஜா, செல்வராஜா, பாக்கியம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் விநாயகமூர்த்தி (கொழும்பு), விக்னேஸ்வரி (நோர்வே), விக்னேஸ்வரன் (லண்டன்), விஜயகுமாரி, விக்னராஜா, விஜயலலிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நித்தியகல்யாணி, சிவசுப்பிரமணியம், விஜயலக்ஷ்மி, தர்மராஜா, நிரஞ்சினி, தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2002) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*தச்சன்தோப்பு வீதி, கரவெட்டி மத்தி.*
*T.P. 070-2122455*
(C/22560)
தகவல்: **நி.பாபு** (மருமகன்)

## க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம் நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஏதாவதொரு க்லோகாட் பெட்டி ஒன்றையும் இணைத்து அனுப்ப மறக்க வேண்டாம். நீங்கள் பரிசு வெல்லும் அதே நேரத்தில் உங்கள் விற்பனையாளரும் பரிசு வெல்வார்.

**முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு**
21'' கலர் தொலைக்காட்சி, கசட் பிளெயர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்.

**இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்**
21'' கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளென்டர், VCD பிளெயர் ஒன்று.

**விற்பனையாளர்களுக்கும் பரிசு**
அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் நான்கு டீப் ஃபீரிசர்கள்.

**ஆறுதல் பரிசுகள்**
100 ஆறுதல் பரிசுகளாக ஹேமாஸ் சந்தைப்படுத்தல் வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

**முதலாவதாக அனுப்பி வைப்போருக்கு**
முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைப்போரில், 650 பெயர்களுக்கும் அவர்கள் விற்பனையாளர்களுக்கும் அழகிய டிஷேட் ஒன்று.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19 ஆம் திகதி 2002 இக்கு முன் அனுப்பி வையுங்கள்
க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு – த.பெ.இல. 911 கொழும்பு.

க்லோகாட்

Masters DDB LN: C/38/2002

# மன்னிப்புச்சபைக் குழு வருகை; நாளை மல்லாவி செல்லும்

கொழும்பு,ஜுன்18

சர்வதேச மன்னிப்புச் சபையின் விசேட தூதுக்குழு ஒன்று நேற்று இலங்கை வந்து சேர்ந்தது.

மூன்றுபேர் கொண்ட இந்த விசேட தூதுக்குழு, அரசாங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசும். இப்பேச்சுக்களின்போது பொதுமக்களின் உரிமைகளைப் பேணுவது குறித்து ஆராயப்படும் என்று தெரிகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவையும் இக்குழு சந்தித்துப் பேசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இச்சந்திப்புக் குறித்து திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இக்குழுவினர் நாளை மல்லாவிக்குச் செல்லவிருக்கின்றனர். அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து இக்குழு பேச்சு நடத்தும் எனத் தெரிகிறது. (ஐ)

# மட்டக்களப்பில் 19இல் எழுச்சிப் போராட்டம்

செங்கலடி,ஜுன்18

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு, குடிதண்ணீர்ப் பிரச்சினை ஆகியவற்றை முன்வைத்து.

நாளை 19ஆம் திகதி மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்று நடத்தப்படவிருக்கிறது. ஐக்கிய சமூக நலன புரி அமைப்புக்களின் ஒன்றியம் இப்போராட்டத்துக்கு ஏற்பாடு செய்து வருகின்றது. போராட்டம் நடத்தும் இடம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

புத்தூர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பரம்துறை ஆகிய கிராமங்கள் இந்த ஒன்றியத்தில் அடங்குகின்றன. ஒன்றியத்தின் செயலாளர் துரை மனோகரன் போராட்டம் தொடர்பாக அறிக்கை விடுத்திருக்கிறார். (ஐ)

# சாத்வீகப்போர் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்18

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தின் முன்பாக இன்று நடைபெறவிருந்த சாத்வீகப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று நடைபெறவிருந்த கட்சியின் மத்திய குழுக்கூட்டம் பிற்போடப்பட்டதைத் தொடர்ந்தே ஆதரவாளர்களால் நடத்தப்படவிருந்த சாத்வீகப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டணியின் தேசியப் பட்டியல் வெற்றிடத்துக்கு கூட்டணிப் பிரமுகர் முத்துலிங்கத்தை நியமிக்கக்கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட இருந்தது. (ஐ-12)

# செயலமர்வு பிற்போடப்பட்டது

தென்மராட்சிக் கல்வி வலயத்தால நாளையும், நாளைமறுதினமும் நடத்தப்படவிருந்த ஆரம்பப்பிரிவு, ஜி.சீ.ஈ. உயர்தரத்துக்கான ஆங்கிலபாட கருத்தரங்கு மற்றும் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளன. இவை நடைபெறும் திகதிகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

செல்வி சி.சசிகலாதேவி அவர்களின்

அன்புத் தந்தையார்

### அமரர் சுப்பர் சின்னத்தம்பி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுநிர்வாக பட்டப்பின் டிப்ளோமா மாணவர்கள் 2001/2002

உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(4963)


## காணாமற் போய்விட்டது!

கடந்த ஜுன் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணியளவில் MD 90 - 500 6197-எஞ்சின் இல. MD 90 E-1934554 அடிச்சட்ட இல. MD 90 1934498 சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டச் சந்தியில் வைத்துக் காணாமற் போய்விட்டது. இதைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

மணியம் ஸ்ரோர்ஸ்

29, நாவலர் வீதி,

நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(4959)

நிறைஞ்சனாஸ்

சங்கானை

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த

ரோஜாக்கூட்டம்

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)

ராஜா யாழ்ப்பாணம்.

குணால், மோனல்

மற்றும் பலர் நடித்த

பேசாத கண்ணும் பேசுமே...

காட்சிகள்: தினசரி - 10.30, 2.30, 5.30

சனி, ஞாயிறு - 10.30, 2.30, 5.30

(C/22538)

நாகம்ஸ் சுன்னாகம்

அருண்குமார், சுமிதா,

ரஞ்சித், மனோரமா நடித்த

பாண்டவர் பூமி

(ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)

இனிய பாடல்கள் நிறைந்தது.

(4956)

## YOGI HOME SCIENCE ACADAMY

புதிய வகுப்புகள் ஆரம்பம்

மனையியல் புதிய பிரிவு வகுப்புகள் 21.06.2002 அன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

விசேட பயிற்சிநெறியாக முக ஒப்பனையும் நவீன தலை அலங்காரங்களும்,

15 வகுப்புகள் மட்டும். சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

*75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(4923)

உ

## இப்போது மீண்டும் யாழ்நகரில்!



ஏழு வருடகால இடைவெளிக்குப் பின்னர்

உங்களுக்குச் சேவையாற்ற திரும்பவும்

நேற்று (17-06-2002) திங்கட்கிழமை முதல்

குதூகலமாக ஆரம்பமாகியுள்ளது

சோபனா ஆடையகம்

இல. 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணத்தில்

உங்களுக்குப் பிடித்த நவீன மோஸ்தர்களிலான

புத்தம்புதிய ஆடை வகைகளைக் குறைந்த

விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள நீங்கள்

நாடவேண்டிய ஒரே இடம் இதுதான்!

16, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்,
"சோபனா ஆடையகம்"

(C/22563)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தருமலிங்கம் சரஸ்வதியம்மா

மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தருமலிங்கம் சரஸ்வதியம்மா நேற்று (17.06.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இரத்தினம்-அழகம்மா தம்பதிகளின் மருமகளும் நடேஸவரலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரலிங்கம், இராசேஸ்வரலிங்கம், ஈஸ்வரலிங்கம் மற்றும் விக்னேஸ்வரலிங்கம், லோகேஸ்வரி (வாணி), பாலரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜமலர் (சுவிஸ்), மதிவதனி, மகேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் தமிழினி, செந்தூரன், இராஜினி (சுவிஸ்), ஜயிந்தா (வேம்படி மகளிர் கல்லூரி, மாணவி), தனுஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2002) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (4957)

தகவல்:
த.விக்னேஸ்வரலிங்கம்
(பாலன் - மகன்)

## திருமதி அருணாசலம் கண்மணியம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் கண்மணியம்மா அவர்கள் நேற்று (17.06.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் கோபாலரத்தினம் (முன்னாள் உப-தபால் அதிபர், நல்லூர்), இராசரத்தினம் (ஆஸ்திரேலியா), தர்மலிங்கம் (லண்டன்), லயன் மகேஸ்வரன், வாமதேவன் (லண்டன்), பரமேஸ்வரன், மனோகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவனேஸ்வரி, இந்திராதேவி (ஆஸ்திரேலியா), லலிதாதேவி (லண்டன்), பத்மா, றஜினி (லண்டன்), சந்திரா, ராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகலா, காண்டீபன், மேகலா, தனஞ்ஜெயன், மகிந்தன், முகுந்தன், உமா, உசா, தர்சினி, கரன், தீபன், நிசாந்தி, அஜந்தன், நிசாந்தன், வாணி, சஞ்ஜீவ், கோபிகா, பைரவி, ஆதவன், வருணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2002) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அருணோதயம்"*
*9, ஜமுனா வீதி,*
*நல்லூர்.* (4964)

தகவல்:
அ.மகேஸ்வரன் (மகன்),
அ.பரமேஸ்வரன் (மகன்)

## சுப்பிரமணியம் குகனேஸ்வரன் (பேபி)

இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குகனேஸ்வரன் (பேபி) நேற்று (17.06.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பொன்னம்பலம் மற்றும் கனகம்மா ஆகியோரின் மருமகனும் விஜயநாதன் (திருகோணமலை), குகனேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் கலாநிதி அவர்களின் அன்புக் கணவரும் செல்வராஜாவின் (ஜேர்மனி) மைத்துனரும் செந்தூரன், ஆரூரன், கௌசிகன் (யாழ். மத்திய கல்லூரி), வினோஜா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), உசாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*214/12, இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (4965)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## சுப்பையா சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சிங்காவத்தை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சின்னத்தம்பி 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இளையபிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் சாந்தினிதேவி (ஆசிரியை, திருகோணமலை), யோகேந்திரன், சசிகலாதேவி (பிராந்திய கணக்கீட்டு அலுவலர், தபாற் திணைக்களம்), காலஞ்சென்ற கிரீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரனின் (ஆசிரியர், திருகோணமலை) மாமனாரும் நாகம்மா, பாலசிங்கம், சிவலிங்கம் (பொதுமுகாமையாளர், கூ.ச. நெடுங்கேணி), குணசிங்கம் (ஜேர்மனி), இரத்தினசிங்கம் (டென்மார்க்), கதிர்காமலிங்கம் (முகாமையாளர், கூ.ச. கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரான்சிஸ் சேவியர் (ஓய்வுபெற்ற ஆசிரியர், கண்டி), பொன்னம்மா, செல்லையா, பாக்கியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.06.2002) திங்கட்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.* (4966)

தகவல்:
ந.கிருபாகரன் (மருமகன்)

## பாலச்சந்திரன் சடாட்சரம்

(ஓய்வுபெற்ற கட்டட பரிசோதகர், கல்வித் திணைக்களம்
பின்பு SCAGULL Construction கட்டடப் பரிசோதகர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கல்லூரி ஒழுங்கை கொக்குவிலை வசிபபிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் சடாட்சரம் 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரா (மலாயா)-பாக்கியலக்சுமி தம்பதியினரின் மூத்த அன்புப் புதல்வனும் விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி(முதலியார்)-அன்னலக்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும் உமாவின் பாசமிகு தந்தையும் பகீரதனின் அன்பு மாமனாரும் சயனின் அன்புப் பேரனும் ஜெகநாதன், ஞானசபாபதி, திருமதி செல்வராணி, திருமதி இந்திராணி, திருமதி புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரி, திலகவதி, நமோலிங்கம், சிவபாலன், திருமதி சத்தியகுலரத்தினம் கந்தவனம், ராஜசுந்தரம், ராஜசேகரம், ராஜேந்திரம், திருமதி ராஜலக்சுமி குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி ஜெயநாயகி அழகரத்தினத்தின் பாசமிகு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2002) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

தகவல்:
மனைவி, மகள்,
சகோதரர்கள். (4967)

# கடற்படை உயர்மட்ட குழுவுடன் மீனவர் பிரதிநிதிகள் பேச்சு!

யாழ்ப்பாணம்,ஜுன்18

குடாநாட்டில் மீன் பிடிப்பதற்கு நடைமுறையில் இருந்து வந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் பிரதேசம் ஆகியன தொடர்பாக கடற்படையின் உயர்மட்டக் குழுவுடன் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்

நேற்று நண்பகல் யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கடற்படை அதிகாரி றியர் அட்மிரல் விஜேவிக்கிரம தலைமையிலான கடற்படை உயர் அதிகாரிகள் குழுவினர் மற்றும் கடற்படைத் தளபதிகள், வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர், சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாசப் பிரதிநிதிகள் குருநகர் மீன் வாடியடி, கொழும்புத்துறை மற்றும் காக்கைதீவு இறங்குதுறைகளை பயன்படுத்தவேண்டிய தமது அவசியம் குறித்து படை அதிகாரிகளிடம் விவரித்தனர்.

அதற்குப் பதிலளித்த படை அதிகாரிகள் காக்கைதீவு துறைமுகத்தை உடனடியாகப் பயன்படுத்த அனுமதியளிக்கப்படுவதாகவும், ஏனைய இரண்டு துறைகளைப் பயன்படுத்துவது குறித்து பாதுகாப்புச் செயலருடன் ஆலோசித்து விரைவில் பதில் அளிப்பதாகவும் கூறினர்.

'பாஸ்' பெறும் நடைமுறை தொடர்பாக விளக்கமளித்த படை அதிகாரிகள், இது விடயத்தில் படையினருடன் தொடர்ந்து ஒத்துழைக்குமாறும் -

விரைவில் இம்முறை நீக்கப்பட்டு, கடற்றொழில் திணைக்கள அனுமதி அட்டைகளுடன் மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படுவரெனவும் தெரிவித்தனர்.

வலி.வடக்குப் பிரதேச சங்கப் பிரதிநிதிகள் தமது இடங்களில் தாம் மீளக் குடியேறவும் கடற்றொழிலில் ஈடுபடவும் அனுமதிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டனர். (ஐ-9-86)

## ஊர்காவற் படையினருக்கு சேமலாப நிதித் திட்டம்

ஸ்ரீலங்காவின் ஊர்காவற் படையினருக்கு சேமலாப நிதி வழங்கும் திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஊர்காவற் படையினர் குறைந்த சம்பளத்துடன் பொலீஸாருக்கு சமமான கடமைகளைச் செய்துவருகின்றனர்.

அவர்களுக்கு நாள் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே அவர்களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப் பட உள்ளது. அத்துடன் சேமலாப நிதியத்திட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஊர்காவற் படையினருக்கு மேலும் பல வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.(ஐ-4-12)

## மடு வீதி திறக்கப்படுகிறது

மன்னார் மடு மாதா தேவாலய உற்சவத்தில் மக்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக மடு வீதியைத் திறப்பதற்கு அரசு இணக்கம் தெரிவித்திருப்பதாக புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

வவுனியா - மன்னார் வீதியில் மடுவை இணைக்கும் வீதியை - மடு மாதா தேவாலய உற்சவத்துக்கு முனனர் திறந்துவிடுமாறு அமைச்சர் ஜயலத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (ஐ-4-12)

## பிரதமரிடம் விவரம் சமர்ப்பிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படையின் தங்கியிருக்கும் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொதுக் கட்டடங்கள் என்பவற்றின் விவரங்களை தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இது தொடர்பாக நாளை புதன் கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் ஆராயப்படவிருப்பதாகவும் -

அதற்கு வசதியாகவே இந்த விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு பதிலளித்திருக்கலாம். ஆனால், புலிகள் இன்னும் பதில் அளிக்கவில்லை. அவர்கள் இப்போது பதில் அளிக்கவும் மாட்டார்கள். அவர்கள் பதிலளிப்பதற்குப் புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். இதில் அவர்கள் மிகவும் உறுதியாகவும் கண்டிப்பாகவும் இருக்கிறார்கள் என்று லண்டன் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த நிலையில் அரசாங்கம் அறிவித்தபடி இந்த மாத இறுதியில் இல்லாவிட்டாலும் அடுத்த மாத முடிவுக்குள்ளாவது பேச்சு ஆரம்பமாகுமா? இப்படிக் கேட்டபோது -

"நடந்தால் அது உலக அதிசயங்களில் ஒன்றாக இருக்கும்!" - என்று லண்டன் வட்டாரங்கள் பதிலளித்தன. (ஐ)

## இடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

"முகமாலை சோதனை நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வரும்போது படையினர் இந்த 'பெல்ட்'டுடன் பெண் போராளிகளை அனுமதிக்கின்றனரே?" - என்று விடுதலைப் புலிகள் கேள்வி எழுப்பினர்.

"யாழ்ப்பாணத்தில் அது நடக்கலாம். இது எமது பிரதேசம். இங்கு 'பெல்ட்'டுடன் அனுமதிக்க முடியாது" என்று ஒரேயடியாகப் படையினர் தெரிவித்துவிட்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் தலையிட்டு இரு தரப்பையும் சமாதானம் செய்தார். அதன் பின்னர் இடுப்புப் பட்டியை அகற்றிவிட்டு உள்ளே செல்ல புலிகள் இணங்கினர். (ஐ-3-8)



விடுதலைப் புலிகளின் நெடுந்தீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈகச் சுடர் ஏற்றுகிறார். அருகே புலிகளின் முக்கியஸ்தர்கள்.

## தீவகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மற்றும் பாப்பா, வீமன், ஐயா அண்ணா, நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், புகைப் படத்துறைப் பிரிவுப் பொறுப்பாளர் நிசாம், நிதர்சனம் வீடியோப் பிரிவுப் பொறுப்பாளர் தவா, புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்விழி உட்பட 37போராளிகள் அங்கு வந்திருந்தனர்.

அங்கு போராளிகளை கடற்படையின் ஊர்காவற்றுறை கட்டளை அதிகாரி சந்திரசிறி, காரைநகர் கடற்படைத் தளபதி ஜெயக்கொடி, கடற்படை அதிகாரி ரந்தெனிய ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

அதன் பின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் தீவகத்துக்குள் புலிகள் கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக கட்டளை அதிகாரி சந்திரசிறி விளக்கமளித்தார்.

இதையடுத்து விடுதலைப் புலிகளின் அடையாளஅட்டைகளை கடற்படையினர் பரிசீலனை செய்து பதிவுகளை மேற்கொண்டனர்.

நண்பகல் 12 மணியளவில் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியைத் தாண்டி முதலில் சென்ற இளம்பரிதி, செம்மணன், பாப்பா ஆகியோரை அங்கு காத்திருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கட்டித் தழுவி வரவேற்றனர். தங்கள் உள்ளக்கிடக்கையை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினர்.

தொழிலாளர்கள், மாணவர்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையில் அங்கு மக்கள் கூடியிருந்தனர். அங்கிருந்து பத்து வாகனங்களில் போராளிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். போராளிகள் முதலில் செட்டிபுலம், சாட்டியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்றனர். அங்கு ஈகச்சுடரேற்றல், அகவணக்கம், மலரஞ்சலி ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

போராளிகளுடன் மாவீரர்களின் பெற்றோரும் பொதுமக்களும் இந்நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

### படையினர் பின்தொடர்ந்து காவல்

பின்னர் வேலணை வங்களாவடிச் சந்திக்கு புலிகளின் வாகன அணி சென்றது. அங்கு கூடி நின்ற மக்கள் அவர்களை வரவேற்று குளிர்பானங்கள் வழங்கி உபசரித்தனர்.

பின்னர் புலிகள் ஊர்காவற்றுறை, தம்பாட்டி நோக்கிப் புறப்பட்டனர்.

கடற்படையின் அதிகாரி ஒருவரும் சில சிப்பாய்களும் ஒரு பிக்அப்பிலும், ஒரு மோட்டார் சைக்களிலிலும் விடுதலைப் புலிகள் அணியைப் பின்தொடர்ந்தனர். தம்பாட்டியில் மக்கள் புலிகளுக்கு மதிய உணவு வழங்கி உபசரித்தனர். அங்கு கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து புலிகள் அணி ஊர்காவற்றுறைக்குச் சென்றது. ஊர்காவற்றுறைச் சந்தியில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கூடி நின்று வரவேற்றனர்.

அங்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரும் காணப்பட்டனர்.

அங்கு கூடியிருந்த பாடசாலை மாணவர்கள் புலிகளோடு செல்ல முயற்சித்ததைக் கடற்படையினர் தடுத்தனர். அதன் பின்னர் புலிகள் அணி மெலிஞ்சிமுனை கிராமத்துக்குச் சென்றது. அங்குள்ள மக்கள் 'எங்கள் தலைவர் பிரபாகரன்', 'எங்கள் உடன்பிறப்புக்கள் எம்முடன் இணைய வந்துவிட்டார்கள்', 'புலிகளின் தாகம் தமிழீழம்' என்று உரக்க குரல் எழுப்பி போராளிகளைக் கட்டித் தழுவி வரவேற்றனர்.

அதன்பின்னர் அங்கிருந்து புளியங்கூடலுக்குச் சென்ற புலிகள் அணி அங்கு அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றியது. புளியங்கூடல் சந்தியில் அமைக்கப்பட்டு பின்னர் சேதமாக்கப்பட்ட மாவீரர் நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. ஈகச் சுடரேற்றல், அகவணக்கம் ஆகியன இடம்பெற்றன. அதைத் தொடர்ந்து வேலணைத் துறையூரில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.(ஐ-3-8)

## சீருடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படத்தை விநியோகிப்பது மக்கள் மனதில் இராணுவச் சிந்தனையைத் தூண்டும் செயல். ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்ட விடுதலைப் புலிகள் இத்தகைய படத்துடன் கூடிய கலண்டரை விநியோகிப்பது யுத்தநிறுத்த மீறல் ஆகும்.

"சிவில் உடையுடன் கூடிய படத்தை விநியோகிப்பதே பொருத்தமாக இருக்கும் அதை நாங்கள் ஆட்சேபிக்கமாட்டோம் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-3-8)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் ஆட்சேபித்தனர்.

'பொதுமக்களுடன் இணைந்து அரசியல் பணிசெய்யவே வந்துள்ளோம். பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் படையினர் நடந்து கொள்கிறார்கள். இது யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறும் செயல்' - என்று விடுதலைப் புலிகள், கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டனர்.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழு, கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

"இது எமது கட்டுப்பாட்டுப் பிரதேசம். இங்கு ஈ.பி.டி.பியினர் உள்ளனர். எமது பிரதேசத்தில் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெற அனுமதிக்கமுடியாது. எமது பிரசன்னம் இருக்கும். விடுதலைப் புலிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் வந்துள்ளார். அவருக்கும் நாம் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

"நாம் அருகில் செல்லவில்லை. 500 மீற்றர் தொலைவிலேயே நிற்கிறோம்" என்று கடற்படை அதிகாரி தெரிவித்தார்.

கண்காணிப்பு அதிகாரி அதனைப் புலிகளிடம் எடுத்துக் கூறினார். ஆனால், அதைப் புலிகள் ஏற்கவில்லை. (ஐ-3-8-16)


### அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட நான்காம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று (18.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் பொது மண்டபத்தில் நடைபெறும்.

தவறாது அனைத்து மாணவர்களும் சமுகம்தரவும்.

(4968) இறுதி வருட மாணவப் பிரதிநிதி.

இன்று முதல் ஆரம்பமாகின்றன!

இந்தியாவிலிருந்து வருகை தருகின்ற

அருட்திரு. அகஸ்ரின் முண்டக்கட்

குழுவினரின்

### இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்

கிளிநொச்சி/முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில்

செவ். 18-06-2002 - மாலை 4 - 19.06.2002 பகல் 12 மணிவரை - அமதிபுரம்
- குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகளுக்கு
புதன் 19.06.2002 - மாலை 4 - 10 மணிவரை - மல்லாவி
வியா. 20.06.2002 - மாலை 4 - 10 மணிவரை - முழங்காவில்
வெள். 21.06.2002 - மாலை 4 - 10 மணிவரை - கிளிநொச்சி
சனி 22.06.2002 - மாலை 4 - 10 மணிவரை - முல்லைத்தீவு

ஞாயிறு - 23.06.2002
திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு
இரவு 7 முதல் அதிகாலை வரை
புதுக்குடியிருப்பு

யாழ். குடாநாட்டில்

திங்கள் 24.06.2002 - மாலை 4 - 8 மணிவரை/25.06.2002 காலை 8 - 12 மணிவரை
- குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகளுக்கு
ஆயர் இல்லம்
செவ். 25.06.2002 - மாலை 4 - 8 மணிவரை - தும்பளை

புதன் 23-06-2002
திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடு
மாலை 7 மணிமுதல் அதிகாலை வரை
புனித பத்திரிசியார் கல்லூரி மைதானம்.

அனைத்து வழிபாடுகளிலும் தூய ஆவியின் வல்லமை பெருக செபிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம். (4960) இறை தியான குழுவினர்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
விக்ரம், சிவரஞ்சினி நடித்த
✹ நம்பர் 1 ✹
(பிரதிகள் உடன் பெறலாம்)
HN
பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.
(C/22564)

D.M.I.
ஆரியகுளம் சந்தி.
எழுதுவினைஞர்
பரீட்சை வகுப்பு
த.தவசேகர் B.Sc.
ஆரம்பம்: 20-06 வியாழன்
மாலை 3.30 மணி.
(C/22558)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.